தமிழ் முரசு

6

ஆசிரியர்:

ம.பொ.சிவஞானம்



தமிழ் முரசு

தொகுதி : க | விய - பங்குனி - உ 15-3-1947 | பகுதி : கூ

பொருளடக்கம்

வடக்கும் தெற்கும்	தலையங்கம்	... உ
செய்தித் திரட்டு		... கூ
வர்க்கப் புரட்சி	'பாமரன்'	... கரு
இடி	போ. குருசாமி	... கஎ
கவலை தீருமா?	மு. வரதராஜன்	... உரு
கிழவனுக்குக் குமரி	'வள்ளல்'	... உகூ
வருங்காலத்தில்....	ரா. பி. சேதுப்பிள்ளை	... ஙஉ
தமிழர் நிலை (பாட்டு)	ப. அரங்கசாமி	.... ஙங
நடுத்தர மக்கள்...	அ. ச. ஞானசம்பந்தம்	... ஙரு
புரட்சிக் கவி இளங்கோ	'ஞானம்'	... சக
நாட்டு நடப்பு	'ஞானம்'	... சஅ

அட்டைப் படம் : திரு. எஸ். வி. லிங்கம், சென்னை.

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

தமிழ் முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

வடக்கும் தெற்கும்

சமீபத்தில் டெல்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி சமரசம் பேச முஸ்லிம் லீகுக்கு அழைப்பு விடுத்துள்ளது. பாகிஸ்தானன்றி வேறெதிலும் திருப்தியடையாத ஜனாப் ஜின்னாவைத்தான் காங்கிரஸ் அழைத்திருக்கிறது. அதிலும், நிபந்தனையற்ற அழைப்பு. இந்தியாவின் அமைதியை, ஏகாதிபத்தியத்தின் பரிபூரண வெளியேற்றத்தை விரும்பும் எவரும் காங்கிரசின் இந்த இராஜ தந்திர நடவடிக்கையைக் கண்டு மகிழாமல் இருக்கமுடியாது. நல்லெண்ணத்துடன் துவக்கப்பட்டுள்ள இந்தச் சமரச முயற்சி வெற்றிபெற வேண்டுமென்று நாமும் பிரார்த்திக்கிறோம்.

ஜனாப் ஜின்னாவை அழைத்திருப்பதிலிருந்து பாகிஸ்தான் அடிப்படையில் சமரசம் காணக் காங்கிரஸ் விரும்புவதாகவே எண்ணவேண்டும். 'பாஞ்சாலம் பிளக்கப்பட வேண்டியதே' என்று காரியக் கமிட்டி செய்துள்ள தீர்மானமும் பிரிவினைக்குக் காங்கிரஸ் ஏற்பாடு செய்ய முன்வந்து விட்டது என்பதை உணர்த்துகிறது. "பாஞ்சாலம் மட்டுமல்ல, அவசியமானால், வங்காளத்தையும் துண்டாட வேண்

டியதே" என்று காங்கிரஸ் தலைவர் கிருபாளினி சென்னையில் கூறியதும், "சிந்துவையும் சிதைக்கத் திட்டம் வகுத்து விட்டேன்" என்று பிரபல காங்கிரஸ் வாதி ஜயராம்தாஸ் தௌலத்ராம் கூறுவதும் நமது ஊகத்தை உறுதி செய்கின்றன.

இன்று எந்த வங்கத்தைப் பிளக்கக் காங்கிரஸ் தலைவர் கருதுகிறாரோ, அதே செயலை அன்று கர்சான் செய்தபோதுதான் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் துவங்கியது. வங்கப் பிரிவினை எதிர்ப்பில்தான் சுதேசி இயக்கம் அரும்பெடுத்தது. 'இந்தியா இந்தியருக்கே' என்ற தேசிய கோஷம் கிளம்பியது. 'சுயராஜ்யம்' என்ற சொல்லும் பிறந்தது. ஆம், பிரிவினை எதிர்ப்பில் வளர்ந்த தேசியம் இன்று பிரிவினையை நிறைவேற்றுவதில் முனைந்து விட்டது.

இந்தியாவின் வடக்கே இன்று அடிகோலுவது இனப் பிரிவினைக்கு அல்ல; சமயப் பிரிவினைக்கே. நட்பின் பேரில் அல்ல; பகைமையின் பேரில். நீதியை உணர்ந்ததால் அல்ல; நிர்ப்பந்தம் ஏற்பட்டதால். மனம் வேறு செயல் வேறாகச் செய்யப்படும் இந்தப் பிரிவினையால் ஏற்படும் பலன் என்ன என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

தென்னிந்தியாவிலும் பிரிவினைக் கோரிக்கை வலுத்து வருகின்றது. நான்கு மொழி பேசும் இனத்தவரும் தங்கள் தங்கள் தாயகத்தில் தனியரசு நிறுவத் தவிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'தமிழருக்குத் தனியரசு' என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. ஆனால், இங்குப்

பிரிவினை உணர்ச்சி வெறும் கிளர்ச்சியளவில் இருக்கின்றதே யொழிய, புரட்சியாக மாறவில்லை. தமிழ் நாட்டில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற தமிழ்நாடு க்காங்கிரஸ் கமிட்டி இவ்விஷயத்தில் அக்கறை கொள்ள வில்லை.

தமிழ் நாட்டுப் பிரிவினை, தமிழருக்குத் தனியரசு ஆகிய கோரிக்கைகள் காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானவை என்று எந்தத் தேச பக்தரும் சொல்ல முடியாது. மொழிவாரி மாகாணப் பிரிவினை காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட கொள்கை. இந்தக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருமாறு தமிழர் கேட்பதில் தவறு என்ன இருக்கிறது? மாகாணப் பிரிவினைக்கு ஆந்திரர் அவசரப்பட்ட போது காங்கிரஸ் தலைமையினர் அதில் கருத்துச் செலுத்தவில்லை. ஆனால், வங்கத்தையும் பாஞ்சாலத்தையும் பிரிக்க வேண்டுமென்று நேற்றுத் தோன்றிய கோரிக்கைக்குக் காங்கிரஸ் தலைமையினர் அவசரம் காட்டுகின்றனர். பண்டித நேரு அதற்கான திட்டங்களை வைசிராய் வேவல் மூலம் இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டதாகவும் செய்தி வருகிறது. ஆந்திரர், கேரளர் போன்று தமிழர்களும் மாகாணப் பிரிவினையில் தீவிரம் காட்டியிருந்தால், காங்கிரஸ் தலைமையினர் வடக்கே காட்டும் தீவிரத்தைத் தெற்கேயும் காட்டியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆந்திரமும் கேரளமும் கன்னடமும் பிரிந்துவிட்டால் தமிழ் நாடு தானாகவே தனி நாடாக ஆகிவிடும் என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் விட்டுப்

போகும் அந்தத் தமிழ் நாட்டில் திருவிதாங்கூர்த் தமிழ் நாடும், சித்தூர், சென்னை ஆகிய ஜில்லாக்களும் இரா என்பதை இந்த மேதாவிகள் உணருவதில்லை. தமிழ் நாடு தனியாவது மட்டும் போதாது. தமிழருக்கு உரிய நிலத்தில் ஓர் அங்குலம் கூடப் பிற இனத்தார் பறித்துப்போக விடக்கூடாது.

பிரிக்கப்பட்ட தமிழ் நாட்டில் பூரண சுதந்திரம் உள்ள தமிழரசு நிறுவப்பட வேண்டும் என்பதும் காங்கிரஸ் கொள்கைக்கு முரண்பட்டதல்ல.

> "எந்த ஒரு மாகாணமும் சமஷ்டியில் சேராது சுதந்திரமாகத் தனித்து நிற்க விரும்பினால் அதற்கு அந்த உரிமை உண்டு. இஷ்டத்துக்கு விரோதமாகச் சமஷ்டியில் இருக்க எந்தப் பிற தேசத்தையும் நிர்ப்பந்திக்க மாட்டோம்"

என்று பல ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் செய்த தீர்மானம் இன்னும் அமுலில் இருக்கிறது. காங்கிரஸ் தலைவர் கிருபாலினியும்கூடச் சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

நம்மைப் பொறுத்த வரையில், வடக்கே நிலைமை எதுவானாலும் தமிழரசு ஒரு சுதந்திர அங்கமாக இந்தியச் சமஷ்டியில் இணையவேண்டுமென்றே விரும்புகிறோம். எனவே, தமிழ் நாடு காங்கிரஸ் வாதிகள் தமிழரசுக் கிளர்ச்சியைக் கண்டு அஞ்சவோ விலகி நிற்கவோ அவசியமில்லை.

பிற மாகாணங்களில் இன உரிமைக் கிளர்ச்சி காங்கிரசுக்குள்ளேயே உருவெடுக்கிறது; காங்கிரசுக்கு வெளியே உள்ள பிற கட்சியினரையும் கட்டி இழுத்து ஒன்ருகப் பிணைக்கிறது. ஆந்திரமும், கேரளமுமே இதற்குத் தக்க சான்று. ஆனால், தமிழகத்தில் மட்டும் காங்கிரஸ் வாதிகளில் பெரும்பாலோர் இன உணர்ச்சி இல்லாதிருக்கக் காரணம் என்ன? வஞ்சம் அல்ல; வழக்கத்துக்கு அடிமை. கடந்த இருபது ஆண்டுகளாக மொழிப்பற்று இனப்பற்றுகளுக்குப் புறம்பாகத் தமிழ் நாட்டில் தேசியம் வளர்ந்து வந்தது. அதே வழக்கம்தான் இன்றும் நீடித்து வருகிறது. ஆனால், இனியும் நீடிக்கக் கூடாது; நீடிக்க விடவும் முடியாது. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ நாடார் பிற இனத் தலைவர்களுக்குத் தாமும் பின் வாங்கியவரல்ல என்பதைச் செயலில் காட்ட வேண்டும். தமிழர் திருநாளுக்கு முன் தமிழரது சுயநிர்ணயக் கோரிக்கையை ஆமோதித்து அறிக்கை வெளியிட்ட அவரும் அவர் போன்ற காங்கிரஸ் வாதிகளும் அதைச் செயலில் காட்டப் பின் வாங்கக் காரணம் என்ன? தமிழ் நாடு கமிட்டியை இத்துறையில் முன்னுக்கு இழுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு காங்கிரஸ்காரருக்கும் இருக்கின்றது. தமிழரசுக் கோரிக்கை காங்கிரசுக்கு வெளியே வலுப்பெற்ற பிறகுதான் காங்கிரஸ் கமிட்டி வாழ்த்துக் கூறுமென்ருல், அந்த நாளும் வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம். ஆனால், காங்கிரசுக்கு வெளியே தமிழரசுக் கோரிக்கை வலுப் பெறுமானல்,

அது காங்கிரசுக்கு நல்லதல்ல என்று எச்சரிக்கிறோம். ஏகாதிபத்தியத்திட மிருந்து சுதந்திரத்தைப் பெறப் போராடிய காங்கிரஸ் வாதிகள், பெற்ற சுதந்திரத்தைப் பிற இனத்தவரிட மிருந்து பிரித்து வாங்குவதற்குப் பின் வாங்குவது தமிழினத்துக்கு நன்மை செய்வதல்ல.

அட்டைப்பட விளக்கம்

இந்த இதழின் அட்டையை அலங்கரிப்பது திருநீர்மலை அரங்கநாதசாமி ஆலயமும் அதைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சியுமாகும். இது திருமங்கையாழ்வாரால் மதிக்கப் பெற்ற பிரபல கோயில். இதன் முழு நிருவாகப் பொறுப்பும் நமது தேசியத் தலைவர் திரு. சி. என். முத்துரங்க முதலியாருடையதாகும். திருநீர்மலை கிராமத்திலுள்ள விளை நிலங்களின் உரிமையாளர்கள் மலைமேலுள்ள திரு அரங்கனும் மண்மேல் மாளிகை கொண்டு வாழும் முத்து அரங்கனும் ஆவர். இந்தக் கோயில் இன்னும் ஹரிஜன மக்களுக்குத் திறந்து விடப் பெறவில்லை. முதலியார் மனம் திறக்கும் நாள்தான் கோயிலின் கதவும் திறக்கும் நாள். அந்த நாள் எந்த நாளோ ?

இதே ஜில்லாவிலுள்ள ஸ்ரீபெரும்புதூர் வைணவ ஆலயமும் திறக்கப்படவில்லை. இதன் தருமகர்த்தா சென்னை ஹரிஜன சேவா சங்கத் தலைவர், திவான்பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார்தான். ஊரார் ஆலயங்களைத் திறக்க ஓயாது உழைப்பதால் தம் ஆலயத்தைத் திறக்க மறந்தே போனார் போலும்!

செய்தித் திரட்டு

தமிழரசுக் கழகம்:

தமிழரசுக் கழக உட்குழுவினரின் கூட்டம் மார்ச்சு 4-ந் தேதி மாலை 6-மணிக்குத் "தமிழ் முரசு" காரியாலயத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் திரு. வி. க. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (கழக ஆலோசனையாளர்கள்) இருவரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழர் வார விழாவின் வரவு-செலவு செயலாளர் திரு. கொ. மோ. ஜனார்த்தனம் அவர்களால் படிக்கப்பட்டு நிறைவேறியது. பின்னர், அங்கத்தினர்களின் உறுதிமொழிப் பத்திரம் தயாரிக்கப்பட்டது. இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு ஆண்டுக்கொரு முறை ஒரு ரூபாய் சந்தா செலுத்துவோரைக் கழகத்தின் சாதாரண அங்கத்தினராகக் கருதுவதென்று முடிவு செய்யப்பட்டது.

தமிழ் நாடெங்கும் கழகத்தின் கிளைகள் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

*   *   *   *

கம்பர் விழா:

கவியரசர் கம்பர் தமது காவியத்தை அரங்கேற்றிய நாளாகிய பங்குனி உத்தரத்தன்று தமிழ் நாடு எங்கணும் கம்பர் விழா நடத்துமாறு தமிழ் அன்பர்களையும், தமிழ்க் கழகங்களையும் வேண்டுவதாக மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் கழகத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

*   *   *   *

வ. உ. சி. நிதி:

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் ஞாபகார்த்த நிதிக்கு இதுவரை ரூ. 52 ஆயிரம் சேர்ந்திருப்பதாக மேற்படி கமிட்டியின் செயலாளர்கள் அறிவிக்கின்றனர்.

* * * *

மாகாணத் தமிழாசிரியர் மாநாடு:

மார்ச்சு 1, 2 தேதிகளில் சென்னை மாகாணத் தமிழாசிரியர் மாநாடு சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை தலைமை வகித்தார். நாடு முழுவதிலுமிருந்து தமிழாசிரியர்கள் திரளாக வந்திருந்தனர். திரு. சிதம்பரநாதம் செட்டியார் தமிழ்க் கொடியை ஏற்றிவைத்தார். திரு. மு. வரதராஜனார் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். திரு. தி. சு. அவினாசிலிங்கம் மாநாட்டைத் திறந்து வைத்தார். காலஞ் சென்ற நமசிவாயர் படத்தைத் திரு. வி. க. திறந்து வைத்தார்.

இரண்டாம் நாள் மாநாட்டில், குமரி முதல் வேங்கடத்தை எல்லையாகக் கொண்ட தமிழகத்தில் தமிழரசு அமைக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது. மாநாட்டின் இறுதியில் திரு. சி. என். அண்ணாத்துரை, திரு. ம. பொ. சிவஞானம் இருவரும் சொற்பொழிவாற்றினார்கள்.

* * * *

திறப்புவிழா:

சைதாப்பேட்டை, திருவள்ளுவர் சிவநெறிக் கழகத்தின் ஆதரவில் இம்மாதம் 6-ந் தேதி கழக இடத்தில் வ. உ. சி. இதழ் நிலையத்தையும், ஆனயர் இசைத் தமிழ்ப் பள்ளியையும் முறையே திருவாளர்கள் இராமநாதம் பிள்ளை, ஆ. விநாயக முதலியார் ஆகியோர் திறந்து வைத்தனர். திரு. க. சோமசுந்தரம் செட்டியார் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

வர்க்கப் புரட்சி (ஓர் ஆராய்ச்சி)

"பாமரன்"

"முதலாளி வேறு; தொழிலாளி வேறு; இவ்விரு தரப்பினரது நலன்களும் கூட வெவ்வேறு தன்மை வாய்ந்தவை. அதுமட்டுமல்ல, ஒன்றுக்கொன்று முரண்பட்டதும் ஆகும். எனவே, இந்த இரண்டு வர்க்கத்தினரும் உறவுகொண்டு வாழ்வதென்பது ஒருநாளும் முடியாத காரியம். ஆகவே, தொழிலாளி வர்க்கம் நல்வாழ்வு வாழ வேண்டுமானால், முதலாளித்துவ முறையை அடியோடு அழித்தே தீரவேண்டும். அது வெறும் கிளர்ச்சியினால் மட்டும் நடப்பதல்ல; புரட்சி வேண்டும். அந்தப்புரட்சியில் உலகமெங்குமுள்ள தொழிலாளி வர்க்கத்தினர் அனைவரும் ஈடுபட வேண்டும். இந்த வர்க்கப் புரட்சியின் முடிவில் அமைக்கப்படும் தொழிலாளர் ஆட்சிதான் இத்தனை நாளும் சுரண்டப்பட்ட மக்களின் சுய ஆட்சியாகும்."

இது மார்க்ஸீய வாதிகளின் சித்தாந்தம். இந்தக் கொள்கை இன்று உலகம் எங்கும் பரவிவருகிறது. ரஷ்யாவில் பொது உடமைப் புரட்சி வெற்றி பெற்று, சோவியத் முறையில் அரசாங்கம் அமைந்த பிறகு இந்தத் தத்துவம் உலக அறிஞர்களின் ஆதரவையும் பெற்று விட்டது. கடந்த மகாயுத்தத்திற்குப் பிறகு ரஷ்ய நாட்டில் வர்க்கப் போர் வலு வடைந்தது போல, இந்த மகாயுத்தத்திற்குப் பிறகு உலக நாடுகள் பலவற்றிலும் வர்க்கப் போராட்டம் வலு வடைந்து வருகிறது. இந்தியாவும் இதற்கு விதி விலக்கல்ல. குமரி முதல் இமயம் வரையில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற குரல் ஒலிக்கக் கேட்கிறோம். நடு நிலைமையுடன் உலக வரலாற்றை உற்று நோக்குவார் எவரும், நிலப் பிரபுத்துவ முறை தோன்றிய

காலந் தொட்டே ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமை இருந்து வந்திருப்பதை அறியலாம். பின்னர் நவீனக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டதின் விளைவாக முதலாளித்துவம் தோன்றலாயிற்று. அந்நிலையில்தான் ஏழை—பணக்காரன், என்ற பழைய வேற்றுமை முதலாளி—தொழிலாளி என்ற புதிய உருவங் கொண்டது.

இன்று மத்தியிலும் மாகாணங்களிலுமாக இந்தியா எங்கணும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே ஆட்சி புரிகின்றனர். மக்கள் நம்பிக்கையைப் பெற்ற காங்கிரஸ்—முஸ்லீம் லீக் ஆகிய இரண்டு கட்சிகளின் சார்பாகவே இந்த ஆட்சி நடை பெறுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சார்பாக வைசிராய் பிரபு 'அங்கு' 'இங்கு' எனுதபடி, இந்தியா எங்கும் அதிகாரம் செலுத்துகின்றார். தத்துவ ரீதியாகப் பார்க்குமிடத்து, ஏகாதிபத்தியம், தேசீயம்; வகுப்புவாதம் ஆகிய மூன்று சக்திகளுமே இந்தியாவை ஆளுகின்றன எனலாம். இந்த மூன்று சக்திகளுக்கும் கொள்கையில் எத்தகைய உறவும் கிடையாது, இருக்கவும் முடியாது. ஏனெனில், இந்த மூன்று தரப்பினரின் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரண் பட்டவையாகும். ஆனல், முதலாளி வர்க்கத்திற்கு விரோதமாகக் கிளம்பியுள்ள தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியை நசுக்குவதில் மட்டும் மேற்படி மூன்று சக்திகளும் ஒன்று பட்டிருப்பது உலகறிந்த உண்மை. இந்தியாவில் மக்கள் சர்க்கார் தோன்றாத காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ராஜ விஸ்வாசிகளைக் கொண்டு எதேச்சாதிகாரம் செலுத்திய காலத்தில் தொழிலாளர் இயக்கம் தலைதூக்குவது முடியாததாய் இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியை நசுக்க இந்தியா வெங்கும் எண்ணற்ற சதிவழக்குகள் சிருஷ்டிக்கப்பட்டன. வர்க்கப் போராட்ட வாதிகளுக்கு 'இம்' என்றால் சிறை வாசம், 'ஏன்?' என்றால் வனவாசம் என்ற நிலைமை இருந்தது.

அன்று ஏகாதிபத்திய சர்க்கார் சென்று கொண்டிருந்த அதே பாதையில் இன்று மக்களின் சார்பாக ஆட்சி செய்யும் கட்சிகளும் செல்ல ஆரம்பித்துவிட்டன. சுதந்தர எழுச்சியை நசுக்க எந்த எந்த

முறைகளை யெல்லாம் ஏகாதிபத்தியம் கையாண்டதோ அதே முறைகளைக் காங்கிரஸ், லீக் ஆகிய கட்சியினரும் வர்க்கப் புரட்சிக்கு விரோதமாகக் கையாளுகின்றனர். உதாரணமாக, ஊர்வலம், பொதுக்கூட்டம், தொண்டர்படை ஆகியவைகளைத் தடைசெய்வது, பத்திரிகைகளிடம் ஜாமீன் கேட்பது, வாரண்டு இல்லாமல் சோதனை செய்வது, விசாரணை இல்லாமல் சிறை வைப்பது ஆகிய ஏகாதிபத்திய முறைகள் இன்றும் கையாளப் படுகின்றன. தான் துவக்கி வைத்த தொண்டை மக்கள் சர்க்காரும் தொடர்ந்து நடத்தி வருவது கண்டு ஏகாதிபத்தியம் இறும்பூ தெய்துகின்றது. தனது தார்மீக ஆதரவைத் தாராளமாக வழங்குகிறது.

அரசியலில் ஒன்றுக்கொன்று நேர்முரணான கருத்துக்கள் கொண்ட ஏகாதிபத்திய வாதிகள், தேசிய வாதிகள், வகுப்பு வாதிகள் ஆகிய மூன்று தரப்பினரும் வர்க்கப் புரட்சியை நசுக்குவதில் மட்டும் ஒன்று படுவதற்குக்காரணம் அம்மூன்று தரப்பினரின் நலன்களும் நடை முறையும் வர்க்கப் பிரிவினைக்கு விரோதமாக இருப்பதே யாகும்.

ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் மற்றொரு உருவமே யாகும். ஆகவே, முதலாளித்துவத்தின் நலன்தான், வாழ்வுதான் ஏகாதிபத்தியத்தின் நலனும் வாழ்வுமாகிறது. ஆகவே, வர்க்கப் போராட்டத்தை ஒவ்வொரு அணுவிலும் எதிர்க்கவேண்டியது அதனுடைய கடமையாகிறது. அதற்காக யாருடனும் உறவுகொள்வதும் அவசியமாகிறது.

சமய அடிப்படையில் அமைந்தது முஸ்லீம் லீக். முஸ்லீம் லீக்கின் சார்பாக எழுந்துள்ள பாகிஸ்தான் கோரிக்கையானது இந்து முதலாளிகளின் சுரண்டலிருந்து முஸ்லீம் மாகாணங்களை பிரிப்பதற்கேயாகும். முஸ்லீம் முதலாளிகளே பாகிஸ்தான் கோரிக்கைக்கு முக்கிய கர்த்தாக்கள். வங்காளம், பாஞ்சாலம் ஆகிய மாகாணங்களின் தொழிலாளர்கள் உழவர்களில் மிகப்பெரும் பான்மையோர் முஸ்லீம்கள். ஆனால், இவர்கள் உழைப்பால் நிரம்புவது

பெரும்பாலும் இந்துக்களின் பண்பைகள். இது முஸ்லீம் பணக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. தங்கள் மதத்தினரின் உழைப்பு இன்னொரு மதத்தினருக்குப் பயன்படுவது அவர்களுக்கு ஆத்திரத்தை ஊட்டியது. ஆனால், வெகு காலத்திற்கு முன்பே தோன்றி அகில இந்தியக் கூட்டுறவில் வலுவடைந்துள்ள இந்து முதலாளிகளிடம் இப்போது தான் தலை யெடுத்துவரும் முஸ்லீம் முதலாளிகள் போட்டியிட்டு வெற்றி பெறுவது முடியாத காரியம். எனவே, முஸ்லீம் மாகாணங்களின் வளத்தை, முஸ்லீம் மக்களின் உழைப்பைத் தாங்களே ஏகபோகமாக அனுபவிக்க பாகிஸ்தான் ஒன்றுதான் வழி யென்று கண்டனர். அதை நிறைவேற்ற முஸ்லீம் லீகின் துணையை நாடினர். ஆனால், சரண்டல் கொள்கையின் அடிப்படையினின்று எழுந்த பாகிஸ்தான் கோரிக்கையானது இன்று முஸ்லீம் பொது மக்களின் சுதந்திர கோஷமாக மாறிவிட்டது. பாகிஸ்தான் போராட்டம் காரணமாக லீக்கில் ஏழை முஸ்லீம்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. என்றாலும் முஸ்லீம் பணக்காரர்கள்தான் இன்று லீக்கில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஆகவே, வர்க்கப் போராட்டத்தை நசுக்குவதில் லீகின் தலைமைபீடம் ஆதரவு காட்டுவது இயற்கையே ஆகும். ஏகாதிபத்திய எதிர்ப்பில் காங்கிரஸுடன் கைகோர்க்க மறுத்தாலும் வர்க்கப் புரட்சியை எதிர்ப்பதில் மட்டும் ஒத்துழைக்க லீக் பின்வாங்குவதில்லை.

இனி, காங்கிரஸைப்பற்றி ஆராய்வோம். காங்கிரஸ் மகாசபையில் ஏழை மக்களின் எண்ணிக்கையே அதிகம். என்றாலும் காங்கிரஸ் ஒரு தேசிய ஸ்தாபனமாதலால் அதில் முதலாளிகளும் இடம் பெற்றுள்ளனர். காங்கிரஸ் அமைப்பில் இடம் பெறாத, இடம் பெற விரும்பாத இந்தியாவின் குபேரர்கள் பலர் காங்கிரஸை நடத்துவோரின் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளனர். எனவே, முதலாளித்துவம் காங்கிரஸுக்கு உள்ளும், புறமுமாக ஆதிக்கம் செலுத்துகிறது. போராட்ட காலங்களில் காங்கிரஸுக்காக தங்கள் ஆருயிரையும் ஈந்து ஆதரவு காட்டுபவர்கள் ஏழைத்தொண்டர்கள். ஆனால் காங்கிரஸ் அரசாங்க பீடத்தில் ஏறியதும் பட்டதாரிகள், பணக்

காரர்கள் காங்கிரஸைச் சுற்றி வளைத்துக் கொண்டு தங்கள் சுய லத்துக்குப் பயன் படுத்துகின்றனர்.

இந்தியாவிலுள்ள வேறு எந்த கட்சியையும் விட காங்கிரஸ் தான் ஏழை மக்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றிருக்கிறது. ஏனெனில், ஏழை மக்களைப் பற்றி சிந்திப்பதையும், செயலாற்று வதையும் அது தனது கடமையாகக் கொண்டுளது. இதற்குக் காந்தியடிகளே முக்கிய காரணம். என்றாலும், ஏழை மக்களின் எண்ணங்களைவிட பணக்காரர்களின் எண்ணங்களே காங்கிரஸில் அதிகமாக பிரதிபலிக்கிறது. காங்கிரஸுக்கு அதிகாரம் அதிகரிக்க அதிகரிக்க பணக்காரர்களின் ஆதிக்கமும் அதில் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால், முஸ்லிம் லீக்கைப் போல் அல்லா மல் காங்கிரசிற்குள் ஏழை, பணக்காரர் போராட்டம் வெகு நாளுக்கு முன்பே ஆரம்பித்து இன்று உச்ச நிலையை அடைந்துள்ளது.

இதன் விளைவாக, காங்கிரஸ் தொழிலாளர் உழவர்களுக்காக ஒரு திட்டம் தயாரிப்பதும் அதை அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்வதும் அவசியமாயிற்று. காங்கிரஸிலுள்ள முற்போக்கு சக்திகளின் தூண்டுதல் காரணமாக அது முதலாளித்துவ மிராசு தாரர்களின் நலன்களில் ஓரளவு கைவைக்கவும் முன் வந்திருக்கிறது. அமித லாப வரி, ஜமீன்தார் ஒழிப்பு ஆகியவைகளே இதற்குத் தக்க சான்று. ஆனால், தொழிலாளர்களின் நலனைக் காப்பாற்ற விரும்பும் அதே நேரத்திலேயே முதலாளிகளின் நலனையும் காப்பாற்றும் பொறுப்பை அது தானாகவே மேற்கொண்டு விடுகிறது. முதலாளித் துவ நலன்கள், தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முற்றும் விரோதமானது என்பதை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாததே இதற்கு மற்றொரு காரணம். முதலாளி, தொழிலாளி ஆகிய இருவர்களது நலன்களையும் ஏக காலத்தில் சரிப்படுத்த முடியுமென்று இதர தலை வர்களைப்போலவே காந்தியடிகளும் நம்புகின்றார். அதற்காக ஒரு தத்துவத்தையும் கண்டுபிடித்துள்ளார். அதுதான் தர்மகர்த்தாப் பொது வுடைமை முதலாளித்துவத்தை ஒழிப்பதற்குப் பதிலாக முதலாளியின்

சுயநல புத்தியை ஒழித்து, தன்னிடம் குவிந்துள்ள பொருளைத்தன்னு டையதாக எண்ணாது சமூகத்தின் பொதுச் சொத்தாகவும் தன்னை அதைப் பரிபாலிக்கும் தர்மகர்த்தாவாகவும் எண்ணும்படி செய்ய வேண்டுமென்பதே அந்தத் தத்துவத்தின் நோக்கம்.

காந்தியடிகள் இதை நம்பி சொல்லுகிறார் நல்லெண்ணத்துடன் சொல்லுகிறார். எனவே, அவரது கருத்தை நடைமுறைக்கு அனு மதிக்க மறுப்பவர்கள் கூட அவரது நல்லெண்ணத்தை மட்டும் சந்தேகிப்பதில்லை. ஆனால், காந்தியடிகளைப் பின்பற்றி முதலாளி களும், நிலச்சுவான்தாரர்களும் தேசியப் போர்வையில், மேடையேறி "தர்மகர்த்தா பொதுவுடமை வாழ்க" வென்று உடம்பெல்லாம் வாயாகக் கொண்டு ஓலமிடுகின்றபொழுது ஏழை மக்களின் உள்ளம் எரிகின்றது.

இந்தத் தர்மகர்த்தாப் பொதுவுடமை இந்திய நாட்டுக்கு ஒன்றும் புதியதல்ல. பழைய இலக்கியங்களிலும், புராணங்களிலும் 'தானம்' என்ற பெயரால் வற்புறுத்தப்பட்ட அதே கொள்கைதான் இந்தப் புதிய பெயரில் புகுந்துள்ளது. "செல்வத்துப் பயனே ஈதல்" அதா வது 'ஒருவன் பொருள் சேர்ப்பது பிறருக்குக் கொடுப்பதற்காகவே' என்ற புறநானூற்றுப் பாடல் முதற்கொண்டு 'அறம் செய விரும்பு' என்ற ஔவை மொழி வரை எல்லாம் ஏழையின்பால்கருணை காட்டும் படி பணக்காரனுக்குப் போட்ட மனுக்களே அல்லவா?

இந்த அற உபதேசங்களின் பயனாக நாட்டில் இங்கும் அங்கு மாக இரண்டொரு கோயில்களும், கல்விச் சாலைகளும், அன்ன சத்தி ரங்களும் ஏற்பட்டனவே ஒழிய, சுரண்டல் வேலை நின்ற பாடில்லை. பாட்டாளி மக்களின் பட்டினி தீர்ந்து வாழ்வாங்கு வாழ வழி தோன்றவில்லை. அற நிலையங்களைக் கட்டியதன் பயனாய்ப் பணக்காரனுக்கு ஏற்கனவே சேர்ந்திருந்த பொருளோடு புகழும் சேர்ந்தது. 'தரும தாதா' 'அன்ன தாதா' என்றெல்லாம் பணக்காரர் கள் பாராட்டப் பட்டனர். இதனால் சுரண்டல் வாதிகளின் கொடு

மையை உலகம் காணமுடியாது திரையிடப்பட்ட தென்றே கூறலாம்.

கடவுளே திருவெண்காடரின் பாலனாகப் பிறந்து 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே' என்று சொல்லிப் போனதாக எழுதிவைத்த கதைகளெல்லாம் பணம் படைத்தவர்களின் மனத்தை மாற்றச் செய்த முயற்சிகளே அல்லவா? இவ்வாறு அறத்தின்மேல் ஆணையிட்டு, ஆண்டவனைச் சாட்சி வைத்துச் செய்த அற உபதேசங்களும்கூட பயனளிக்கவில்லை. எனவே, 'பசித்தவருக்கு ஈந்தால் பரலோகம் சித்திக்கும்' என்று ஆசையும் காட்டினர். இந்த அறவிலை வாணிகத் தந்திரமும் பணக்காரரிடம் பலிக்கவில்லை. தங்கள் உபதேசமெல்லாம் விழலுக்கிறைத்த நீரானதைக் கண்டு வேதனைப்பட்ட சான்றோர்கள் ஈயாதவனை 'லோபி' என்று ஏசினர்; ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்றும் 'யாரோ அனுபவிப்பர் பாவிகாள் அந்தப் பணம்' என்றும் பழித்துப் பேசினர். பாடுபட்டும் பலனறியாத ஏழை மக்கள் கண்ணார நீர் பொழிந்து கதறி அழுத காட்சியைக் கண்டும்கூட இரும்பொத்த அந்த வன்னெஞ்சக்காரர்களின் இதயம் இரங்கவில்லை. உண்மையைச் சொன்னால் தருமகர்த்தாப் பொதுவுடைமை என்ற பெயரில் போதிக்கப்படும் இந்தக் கொள்கை இந்திய நாட்டில் தோல்வியடைந்து எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. எனவே, மீண்டும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வ தென்பது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.

ஏழைகளின் எழுச்சியை வர்க்கப் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிய அன்று தலைவிதித் தத்துவம் பயன்பட்டது. இன்றோ தர்மகர்த்தா பொதுவுடைமைத் தத்துவம் பயன்படுகிறது. தலைவிதித் தத்துவத்திற்கு முடிவுகண்ட தொழிலாளி வர்க்கம் தர்மகர்த்தா பொதுவுடைமையை ஏற்று மீண்டும் ஏமாறுமா?

இடி

போ: குருசாமி

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தில் ஓர் அடி எப்போதும் என் மனத்தைவிட்டு அகல்வதில்லை. காரணம் சிவபக்தியல்ல; தியாகராயநகரில் வாழும் பேறு பெற்றதுதான். சென்னையின் மற்றப் பேட்டைகளில் வாழுவோர் எங்கள்மீது கொண்டுள்ள பொறாமை உணர்ச்சியின் உருவங்களாகிய இந்தக் கொசுக்களால் நாங்கள் படும்பாடு! ....அடடா.........மார்வாடியிடம் கடன் காரன் படும் பாடுதான். தூக்கத்தோடு நெருங்கிய உறவு பூண்டு இந்தக் கொசுவை மறந்துவிடலாம் என்று எண்ணவும் முடியாது. நாம் கொசுவை மறந்தாலும் கொசு நம்மை மறப்பதில்லை. 'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற அந்தப் புண்ணிய வான் காலத்திலும் இப்படி ஏதாவது ஓர் அனுபவம் இருந்திருக்க வேண்டும். (ஆராய்ச்சி!) இல்லை யென்றால் இவ்வளவு நன்றாக எப்படிச் சொல்லமுடியும்?

இந்தக் கொசுத் தொல்லையையும் பொறுத்துக்கொண்டு, கடிபட்ட இடத்தை ஓங்கி அறைந்துகொண்டு, பனியையும் பொருட் படுத்தாமல் நண்பர்கள் கூடிப் பேசிக்கொண் டிருந்தோம். இரவு மணி பன்னிரண்டாகியும்கூடப் பேச்சு முடிகிற வகையாகக் காணோம். நண்பர் காசிவிசுவநாதனுக்குப் பொழுது விடிந்தவுடன் 'ரேஷன் ஆபீசு'க்குப் போகவேண்டுமே என்ற கவலை. அதைவிடத் திருமணம் புரிந்தவுடன் பிரிந்து வர நேர்ந்த மனக் கவலை. இருந் தாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளக் கூடாது. வைராக்கிய மனம் உடையவரென்று தெரியவேண்டுமாம்! என்னதான் உள்ளத்து உறுதி பூண்டவர் என்று காட்டிக்கொண்டாலும் உள்ளே குமுறும் கொந்தளிப்பு வெளியே தெரியாமலா போய்விடுகிறது! "உடல்

மட்டுமே அங்கே இருக்கிறதாம்; உயிர் இங்கேதான் இருக்கிறதாம். நான் தேடித் தேடிப் பார்த்தேன். காணும்''—இது நண்பர் காசியின் உள்ளக் கொந்தளிப்பு. அன்று தம் மனைவியாரிட மிருந்து வந்த கடிதத்தைப் பற்றி அவர் கூறும் தீர்ப்பு அது. புதுமண மாப்பிள்ளை களானாலும் சரி, புதுக் 'காதல்' அனுபவம் பெற்ற இளைஞர்களானு லும் சரி—தங்கள் உள்ளத்து உணர்ச்சியை அடக்கிவிட வேண்டு மென்றுதான் நினைக்கிறார்கள். இருந்தாலும் அந்த உணர்ச்சி அவர் களை வென்றுவிடுகிறது. இது நூற்றுக்கு நூறு உண்மை. இதிலே பரிதாபம்—இல்லையில்லை சிறப்பு—என்னவென்றால், உணர்ச்சியால் வெல்லப்பட்டு, உறுதி குலைந்த அந்த இளைஞர்களும் மகிழ்கிறார்கள். காரணம் என்ன? உள்ளத்துக்குள்ளே கிடந்து அலமறுமன்ற உணர்ச்சி ஏதாவது ஒரு வடிவத்திலே வெளியேறியே ஆகவேண்டும். இல்லையென்றால் அந்த உணர்ச்சியைக் 'கருக் கொண்ட' ஆன்மாவுக்கு அமைதி கிடையவே கிடையாது. துன்ப உணர்ச்சியாக இருந்தாலும் சரி, இன்ப உணர்ச்சியாக இருந்தாலும் சரி—வெளியேறியே தீரவேண்டும்.

சரி—இதெல்லாம் எதற்கு? எடுத்த விஷயத்துக்கு வருவோம்.

புதிதாகத் திருமணம் புரிந்துவந்து தனிக் குடித்தனம் ஏற்படுத் தப் பாடாய்ப் படுகிறார் நண்பர் காசி. கூட இருக்கும் நாங்களோ 'கட்டை'ப் பிரமச்சாரிகள். கட்டை யென்றால் உணர்ச்சிப் பெருக் கத்தால் கட்டையானவர்கள். காசியை நாங்கள் கேலி செய்வதும், கேலி செய்யப்படுவதில் அவர் மகிழ்வதும், ஆனால் மகிழ்ச்சியடையா மல் கோபிப்பது போல அவர் காட்டிக்கொள்வதுமாக இரவில் அரட் டைக் கச்சேரி மிக மும்முரமாக நடந்தது. நேரம் போவதுதான் தெரியுமா?

காசியை மட்டும் சொல்வானேன்? நான் மட்டும்.........? அவர் மட்டும்தானா மன உணர்ச்சியால் வெல்லப்பட்டார்? அவர் மட்டும்தானா உள்ளத் துடிப்புக்குப் பணிந்தார்? நானும்தான்.

என்னதான் என் மன உணர்ச்சியை வெளியே காட்டாமல் நண்பர்களை ஏமாற்றிவிட்டாலும் என் மனத்தை என்னுல் ஏமாற்றவே முடியவில்லை.

"கலியாணமா? சேச்சே! காசி படுகிற பாட்டைப் பார்த்த பிறகுமா கலியாணம்! அடேயப்பா! நம்மால் முடியாதையா! கலியாணமும் வேண்டாம்; கலியாணத்தைப் பண்ணிக்கொண்டு இப்படி இரவு பகலாய்க் குடும்ப வாழ்க்கையைப் பற்றி எண்ணி எண்ணி இடைஞ்சலுக்கு ஆளாகவும் வேண்டாம்........"—இது என் பேச்சுத்தான். ஆனல், உள்ளத்தின் ஒலியா இது? இல்லவே இல்லை. இதிலுள்ள சொற்களுக்கு ஏற்பட்ட பொருள் ஒன்று; ஆனல் உச்சரிக்கும்போது ஏற்பட்ட ஒலிகளுக்கு ஏற்பட்ட பொருள் வேறொன்று. இந்தச் சொல்—ஒலி முரண்பாட்டை நண்பர் காசி மட்டும்தான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவர் சொன்னர்: "ஏனையா அளக்கிறீர்கள்? இப்படிச் சொன்னவர்கள் எத்தனை பேர் தெரியுமா?" அவர் சொன்னதைக் கேட்ட மற்றொரு நண்பர் சொன்னர்: "இந்த மாதிரி அலைந்து அலைந்து கஷ்டப்பட்டு வீட்டுக்கு வந்து அமர்வதைப் பற்றி நினைத்தால் காசிக்கு எவ்வளவு இன்பம் உண்டாகிறது தெரியுமா? ஊரெல்லாம் சுற்றி அலுப்படைவது எதற்காக? வீட்டுக்குள் காத்துக் கிடக்கும் அமைதியான இன்பக் கொலுவைக் காண்பதற்காக அல்லவா? என்னதான் இருந்தாலும்........"—இந்த நண்பர் தமிழ் நூல்களை நல்ல முறையில் படித்தவர்.

இதெல்லாம் என்னத்துக்கு? 'கலியாணம் வேண்டாம்' என்று நான் சொன்னதுதான் முழுப் பொய்யாயிற்றே! கலியாணம் செய்தே தீரவேண்டும் என்பதுதானே நான் முடிவு செய்தது. ஆனல் அன்று ஏன் என் மனம் அவ்வளவு கஷ்டப்பட்டது? மூச்சே போகாதது போல அவ்வளவு 'புழுக்கம்' அந்தப் பாழும் மனத்துக்கு ஏன்?—இந்தக் கேள்விக்கு அந்த நாளில் விடை எனக்குத் தெரியாது.

*   *   *   *

அந்தப் பெண்ணின் முகச் சாயல் என் மனத்திலே ஆழப் பதிந்து விட்டது. எத்தனையோ பெண்களை நான் பார்க்கவில்லையா? அந்த உருவம் மட்டுமே என்னை ஈர்க்கக் காரணம் என்ன?

இளமை, இன்பம்—இவைதான் கவர்ச்சிக்குக் காரணம் என்று சொல்லுவார்கள். இளமை பொங்கும் முகத்திலே துன்பம் தேங்கிக் கிடக்குமானால் எவ்வளவு கவர்ச்சி இருக்கும் என்பதை உணராதவர்கள்தான் அப்படிச் சொல்லுவார்கள். என்னைக் கவர்ந்த அந்த முகத்தில் தேங்கித் திரையெறிந்த துன்பம்—அடடா—எவ்வளவு கவர்ச்சி உடையது தெரியுமா? படித்த பெண். பெரிய குடும்பம்; ஆனால் ஆதரவாயிருந்த—ஆதாரமாயிருந்த--ஆடவரை இழந்துவிட்ட குடும்பம். செல்வாக்குள்ள தந்தை; செல்வமாய் இருந்த தந்தை. செல்வத்தை அந்தப் பெண் இழந்தாள்; செல்வாக்கு அவரோடு போய் விட்டது. ஆனால், செல்வாக்கின் சாயலான கண்ணியம் தங்கிவிட்டது. கண்ணியத்தைக் காக்க வேண்டும்; ஆனால் செல்வம் இல்லையே! --இந்தப் போராட்டம்தான் அந்த இனிய முகத்தில் ததும்பிக் கிடந்த துன்பத்துக்குக் காரணம். கண்ணியத்தைப் பாது காக்கக் கிளம்பிய அந்தத் துன்பம்தான் என்னை நான் இழந்ததற்குக் காரணம்.

*　　　*　　　*　　　*

காதல் காதல் என்று பேசுகிறார்கள். கதையாசிரியர்களோ கதைக் கடலாகவே அதைத் தீட்டு தீட்டு என்று தீட்டுகிறார்கள். கவிஞர்களுக்கு அதைவிட வேறு வேலை இல்லை. என்ற போதிலும், எனக்கென்னவோ அவர்கள் அத்தனைபேரும் தவறிழைப்பதாகவே படுகிறது. காதல் என்பது புதருக்குள் மறைந்திருந்து வழிப்போக்கன்மேல் திடீரென்று பாய்ந்து கவ்வும் புலி போன்றது என்று அவர்கள் கருதுகிறார்கள். எப்போது காதல் வரும் என்று தெரியாதாம்! மரம் செறிந்த கானகத்தின் நடுவே திடீரெனக் கம்பும் கையுமாகத் தோன்றும் கள்வனைப் போன்றதா காதல்? சேச்சே, இல்லவே இல்லை.

அவர்கள் சொல்வ தெல்லாம்—விவரிப்ப தெல்லாம் கவர்ச்சிதான். கவர்ச்சியைக் காதல் காதல் என்று சொல்லித் தாங்களும் ஏமாறுகிறார்கள்; பிறரையும் ஏமாற்றுகிறார்கள்.

விதை விதைத்து ஒழுங்காக நீரைப் பாய்ச்சினால் முளை தோன்றும். முளையைப் பலவகைப் பகைகளினின்றும் பாதுகாத்து ஓம்பினால் பயிர் வளரும். களைகள் வேறு நடுநடுவே தோன்றும்; இனங் கண்டு அவற்றைக் களையவேண்டும். பிறகும் ஒழுங்காக எச்சரிக்கையோடு இருந்தால்தான் பலன் கிட்டும்,—இதுதான் காதலின் சரித்திரம்.

விதை என்பது கவர்ச்சியின் முதல் தோற்றம், கவர்ச்சியை ஒழுங்கான நெறியில் பயன்படுத்தி, உள்ளத்து உணர்ச்சியை உறுதுணை யாக்கி ஓம்பினால் காதல் முளை எழுதல் கூடும். மேலும் மேலும் கவனத்தோடு இருந்தால் கவர்ச்சியானது காதலாக முளைத்து, வளர்ந்து, பயன் தருதல் கூடும். எல்லா வித்தும் முளைத்துப் பயன் தருவ தில்லை. கவர்ச்சி எல்லாம் காதலாய் மாறிவிடுவது மில்லை.

* * * *

எனக்குப் பெரிய பெரிய குறிக்கோள்கள் உண்டு. நாட்டிலே பல்கிக் கிடக்கும் சாதிப் பித்தை மாய்க்க வேண்டும், சமயப் பிணக்கை மறைக்கவேண்டும், தமிழினம் ஒன்றுபடவேண்டும் —இப்படியாகக் கோடி கோடி எண்ணங்கள். இளமையின் துடிப்பல்ல; எண்ணி எண்ணித் தீர்த்த முடிவுகள்; கொள்கைகள்; கோட்பாடுகள்.

கலப்பு மணம் செய்வேன்—இது என் உள்ளத்தே தோன்றி நிலைத்த ஒரு முடிபு.

அந்தப் பெண் என் 'சாதி'யல்ல. முதற்படி வெற்றி என்றது என் மனம். பழகாத இடத்திலா காதல் என்று எண்ணலாம்.

நான் கொண்டது காதல் இல்லை; நிச்சயமாக இல்லை. கவர்ச்சிதான். கவர்ச்சி காதலாகுமா?—அது வாழ்க்கையில் நெடுந் தொலைவு சென்ற பிறகு விடையிறுக்க வேண்டிய கேள்வி.........

என்னைப் பொறுத்த வரையில் முடிவுக்கு வந்துவிட்டேன். எனக்கும் அந்தக் குடும்பத்துக்கும் மிகமிகப் பொருத்தம். அந்தப் பெண்ணை எனக்கு நிச்சயம் வாழ்க்கைத் துணையாக ஆக்கலாம். எனக்கும் நன்மை; அந்தப் பெண்ணுக்கும் பொருத்தமாய் இருக்கும்.

தடை ஏதாவது இருக்குமா? இருக்க முடியாது. நானும் படித்தவன். நல்ல குடும்பம்தான். நல்ல வருவாய் இருக்கிறது. இருவரையும் உணர்ந்துள்ள—நன்றாய் உணர்ந்துள்ள—நண்பரும் இருக்கிறார். நண்பரின் அறிமுகம் எங்களை ஒன்றுபடுத்தும். இது நிச்சயம்.

இந்த முடிவைப் பற்றி நான் அந்த நண்பரிடம் பேசவேண்டும். இது நான் இட்டிருந்த திட்டம். ஒரு நாள் இதற்காகவே அவரிடம் போனேன்.

அன்று இரவெல்லாம் பேசிக்கொண்டிருந்தோம், ஆனால், என் உள்ளத்து அலை தொண்டைக்குள்ளே நின்றதே தவிர வெளியே வரவில்லை. மறுநாள் காலையிலும் தயங்கித் தயங்கி நின்றேனே தவிர விஷயத்தைப் பேசவே இல்லை. ஏன்? எனக்குப் புரியவில்லை.

அதுதான் அன்று இரவு நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த போது என் மனத்தைத் துன்புறுத்திய காரணம்.

பெரிய பார வண்டியை இழுக்கத் திக்குமுக்காடும் மாடுபோல என் மனம் பளுவைத் தாங்காமல் திணறியது.

* * * *

சரி. இந்த நிலை நீடிக்கக் கூடாது. அவரிடம் போனேன். தயங்கினேன்; மேலும் தயங்கினேன்.

பேசித் தீர்க்க வேண்டியதைப் பேசாமல் எப்படி இருப்பது? சீச்சீ. இதென்ன தயக்கம்! அர்த்தமற்ற தயக்கம்.

"நண்பரே! அன்று உங்களிடம் தயங்கித் தயங்கி நின்றேனே. நினைவிருக்கிறதா?"

"நினைவில்லையே. என்னிடத்தில் உனக்கென்னப்பா தயக்கம்? ஏன், ஏதாவது பணம் தேவையா?"

பணம்! பணம்!! உலகத்திலே மனிதனுக்குப் பொருள் ஒன்று தான் தயக்கத்தைத் தருமோ?

"அதெல்லாம் இல்லை, உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் வந்து........."

"சும்மா, சொல்லப்பா என்னிடத்தில் பேசவா தயக்கம்......'

நியாயந்தானே. உள்ளத்தில் உறைகின்ற அவரிடமா தயக்கம்!

"இல்லை......வேறொன்றும் இல்லை......வந்து......சாமிநாதனுடைய பெண்ணை நான் கலியாணம் செய்ய முடியுமா?........."

தயங்கித் தயங்கித் திகைப்போடு அவர் முகத்தைப் பார்த்தேன். சொல் ஏதாவது பிறக்காதா என்று ஏங்கினேன்.

"நானும் என் மனைவியும் கூட இதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோமப்பா........."

அப்பாடா! என் மனப் பளு குறைந்துவிட்டது. பெருமூச்சு விட்டேன். விடுதலை.

மேலும் பேசினர். "நல்ல பெண்; அமைதியான குணம்; நல்ல குடும்பம். என்றாலும் கலப்பு மணத்துக்கு அவர்கள் தயாரா யில்லையே !........."

ஐயோ ! இதென்ன? என் மனம் வெள்ளச் சுழலில் அகப்பட்ட துரும்புதான். நான் கட்டிய முடிவு......! நான் கட்டிய கோட்டை...!

"அவர்களுடைய மாமாவைக் கேட்கக் கூடாதா?"—வெள்ளத்தில் ஆழ்கின்றவனுடைய கடைசிக் குரல்.

"யாரைக் கேட்டும் பயனில்லை யப்பா........."

இடி விழுந்தது. தலைமேல் அல்ல. மனத்திலே இடி ! பேரிடி !

சிலம்பு

(மாதம் ஒரு புத்தகம்)

ஏப்ரல் முதல் தேதியில் வெளி வரும்

அறிஞர்கள்:

நாமக்கல் கவிஞர்
ம. பொ. சிவஞான கிராமணியார்
மு. வரதராசனர்
கெ. பொ. மீனுட்சிசுந்தரனர்
பரலி. சு. நெல்லையப்பர்
M. S. சுப்பிரமணிய ஐயர்
கொ. மோ. ஜனர்த்தனம்
புலவர். மு. கோவிந்தசாமி
கவி. வி. மல்லிகா அர்ச்சுனன்

மற்றும் பலரும் எழுதுகிருர்கள்.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை

உரிமையாளர், சிலம்பு,
தமிழ்ச்சோலை, திருப்பத்தூர், (வ. ஆ.)

கவலை தீருமா?

மு. வரதராஜன்

ஒரு வீட்டின் முற்றத்தில் வயலை (பசலைக்) கொடி படர்ந்து அழகாக இருந்தது. அழகான காட்சி சிறுவர் உள்ளத்தைக் கவரும். ஆகையால், அந்த வயலைக் கொடியின் பக்கத்தில் உட்கார்ந்து அந்த வீட்டுப் பெண்—சிறு பெண் விளையாடுவது வழக்கமாக இருந்தது. அவளுடைய விளையாட்டுப் பொருள்களாகிய பந்தையும் பொம்மையையும் அங்கே வைத்துக் கொண்டு விளையாடி வந்தாள்.

அந்த வீட்டுப் பசு, கன்று ஈன்றது. சில நாள் வெளியே சென்று மேயாமல் வீட்டிலேயே கன்றுடன் இருந்து வந்தது. ஒருநாள் அதன் பார்வை அந்தச் செழுமையான வயலைக் கொடியின் மேல் சென்றது, எப்படியோ அங்கு வந்து வயலைக் கொடியைத் தின்னத் தொடங்கியது.

அங்கே பொம்மை வைத்து விளையாடிக்கொண்டிருந்த பெண்ணுக்குப் பசு வந்தது தெரியவில்லை. சிறிது நேரத்தில் கொடி இழுக்கப்பட்டுத் தின்னப்படுவதை அறிந்த போது திரும்பிப் பார்த்தாள்; திடுக்கிட்டு எழுந்தாள்; கையிலிருந்த பந்தை எறிந்துவிட்டுப் பொம்மையையும் விட்டுவிட்டு எழுந்து ஓடி வந்துவிட்டாள். தொலைவில் வந்துவிட்ட பிறகு பந்தையும் பொம்மையையும் நினைத்து அலறினாள்; வயிற்றில் அடித்துக்கொண்டு அலறினாள். அவளுக்கு அது வெறும் பொம்மை அல்ல; அருமைக் குழந்தை என்றும் செல்வமகள் என்றும் அந்தப் பொம்மையைப் பாராட்டி வளர்த்து வந்தாள் அல்லவா? தவிர

அழகான வயலைக் கொடியைப் பசு மேய்வதையும் அவளால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. எல்லாம் சேர்ந்து அலறி வயிற்றை அடித்துக் கொள்வதாக முடிந்தது. அலறலைக் கேட்ட தாய் உடனே ஓடிவந்து கண்டு அவளுடைய துன்பத்தைத் தீர்த்தாள்.

இது ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி. 'நம் மகள் அறியாக் குழந்தை' என்று தாய் பல நாளும் எண்ணுவதற்கு இந்த நிகழ்ச்சி காரணமாக இருந்தது.

தாய் மகளைச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தாள். செவிலித்தாய் ஒருத்தி வளர்ப்பதற்குத் துணையாக இருந்தாள். தேனோடு கலந்த பாலை உண்பதற்கும் அவளை வேண்டிவேண்டி ஊட்டி வளர்த்தார்கள். வற்புறுத்தி உண்ணச் செய்தால் அவள் விம்மி விம்மி அழுவாள். மான் போன்ற பார்வையிலே தன் வருத்தத்தைப் புலப்படுத்தி அழுவாள். இவ்வளவு செல்வமாக வளர்ந்து வந்தாள் அவள்.

அருமை மகள் வளர்ந்து அழகு நிரம்பினாள்; பெற்றோர் அறியாமலேயே ஒருவனுடைய காதலியாக மாறிவிட்டாள். பெற்றோர் அறிந்தால் மனம் நோவார்களே என்ற கவலை ஒரு புறம்; காதலுக்கு உள்ள இடையூறுகளைக் கடந்து வெல்ல வேண்டுமே என்ற கவலை மற்றொரு புறம்; இவற்றுக்கு இடையில் அவளுடைய மனப் போராட்டம் பெருகி விட்டது.

பெற்றோருக்கு மகளாக இருந்து காதலைப் புறக்கணிக்க அவளால் முடியவில்லை. பெற்றோருடைய கட்டுப்பாட்டையே புறக்கணிக்கத் துணிந்தாள்; காதலனுடைய வாழ்க்கைத் துணைவியாகவே உறுதி பூண்டாள். இந்த உறுதி பிறந்ததும் மனப் போராட்டம் முடிந்தது.

ஒரு நாள் நள்ளிரவில் பெற்றோர் அறியாமல் வீட்டை விட்டுக் காதலனோடு புறப்பட்டு வெளியூர்க்குச் சென்று விட்டாள்.

பொழுது விடிந்ததும் செவிலியும் தாயும் தந்தையும் தமையன்மாருமாகத் தேடத் தொடங்கிவிட்டார்கள். சிறிது நேரம் கழித்துச் செய்தி ஒன்று வந்து எட்டியது. அவள் ஒரு காளையோடு காட்டு வழியே போய்க்கொண்டிருப்பதையும், அவர்கள் காதலால் பிணைக்கப்பட்டு மகிழ்ச்சியாக விளங்குவதையும் வரும் வழியில் சிலர் கண்டார்கள். கண்டவர்கள் ஊருக்கு வந்ததும் கவலைப்படும் தாய்மார்க்குத் தெரியப்படுத்தினார்கள்.

தாய்மார்க்கு ஒரு வகையில் கவலை தீர்ந்தது; விரும்பிய காதலனோடு மகிழ்ச்சியோடு போய்க்கொண் டிருக்கின்றாள்" என்று கேள்வியுற்றதால் ஒரு வகையில் ஆறுதல் பிறந்தது ஆயினும் பெற்ற மனம், வளர்த்த மனம், பித்து அல்லவா?

"அவன் உண்மையான காதலனாக இருக்கலாம். ஆனால், செல்வ வளம் இல்லாதவனாக இருந்தால் அருமை மகள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? இவள் எப்படி அவனை நம்பினாள்? ஒருகால், அவன் பல பொய் சொல்லி இவளை ஏமாற்றி விட்டிருப்பான். அந்தப் பொய்ம்மொழிகளை இவள் நம்பிவிட் டிருப்பாள். ஆமாம், இவளுக்கு என்ன தெரியும்? நேற்று வரையில் அறியாக் குழந்தையாக வீட்டில் வளர்ந்த பெண் அல்லவா? மகள் காட்டு வழியில் செல்கிறாளாமே! அங்கே பசிக்கு உணவு கிடைக்காதே! குடிக்க நீர் கிடைப்பதும் அருமையாயிற்றே! அங்கே மகள் என்ன செய்வாள்? தேனும் பாலும் கலந்து உண்பதற்கும் அவளை வேண்டி வேண்டி ஊட்டவேண்டுமே! வற்புறுத்தி

ஊட்டினால் அழுது விம்முவாளே! அந்த வழியும் பொல்லாத வழி ஆயிற்றே! கொடிய விலங்குகளும் திரியுமே! இவளோ பயம் மிகுந்த இளம் பெண். அங்கே என்ன செய்வாள்? வயலைக்கொடியைப் பசு மேய வந்தபோது பந்தும் பாவையும் விட்டு விட்டு அலறி ஓடி வந்தவள் அல்லவா? இப்போது என்ன செய்வாள்? அந்தோ! நேற்று வரையில் அவள் இங்கே இப்படித்தானே இருந்து வந்தாள்; இன்று எப்படிக் கொடிய வழியில் மகிழ்ச்சியோடு போகத் துணிந்தாள்?'' என்று செவிலி மனம் கவலைப்பட்டது.

மகளுடைய வளர்ச்சி மற்றவர்களுக்குத் தெரியலாம்; ஆனால் பெற்ற தாய்க்கும் வளர்த்த தாய்க்கும் தெரிவது அருமையே. அவர்களுக்கு வளர்ந்த பிறகும் மகள் சிறு குழந்தைதான்; காதலியான பிறகும் சிறு குழந்தைதான்; காட்டு வழியில் செல்லத் துணிந்த பிறகும் சிறு குழந்தை தான். பெற்று வளர்த்த மனம் அவ்வாறுதான் எண்ணும். அதனால்தான் இன்னும் பசுவுக்குப் பயந்து அலறி ஓடிய நிகழ்ச்சியும் அந்த மனத்தை விட்டு நீங்கவில்லை; தேனும் பாலும் உண்ண வற்புறுத்தினால் விம்மி அழும் தன்மையும் மனத்தில் நீங்காமல் நிற்கின்றது; காட்டு வழியில் காதலனோடு மகிழ்ச்சியோடு செல்வதைக் கண்டவர்கள் வந்து சொன்ன பிறகும் கவலை தீரவில்லை.

இல்லெழு வயலை ஈற்றா தின்றெனப்
பந்துநிலத் தெறிந்து பாவை நீக்கி
அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்
மான்அமர்ப்பு அன்ன மையல் நோக்கமொடு
யானும் தாயும் மடுப்பத் தேனொடு
தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி
நெருநலும் அனையள் மன்னே; இன்றே
மையணல் காளை பொய்புகல் ஆக
அருஞ்சுரம் இறந்தனள் என்பதென்
முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறந்தே.

(நற்றிணை-179)

கிழவனுக்குக் குமரி

'வள்ளல்'

விருத்தாசலம் என்றால் தமிழ் நாட்டவருக்கு நன்றாகத் தெரியும். திருமுதுகுன்றம் என்று சொன்னால் சைவத் திருமுறைகளைப் புரட்டும் அடியார்கள் அறிவார்கள். இந்த இரண்டு பெயர்களும் தவறானவை என்று சொன்னால், ஒருவர் "இவன் குறுகிய நோக்கம் உடையவன்" என்பார்; மற்றொருவர் "நால்வரைப் பழிக்கிறான்" என்பார். ஆனால் உண்மை எது என்று கேட்டால் நான் சொல்லப் போவது தான்.

நான் சொல்லுவ தென்றால் நானாகச் சொல்லும் குயுக்தி என்று எண்ண வேண்டாம். தக்க சான்றுகளோடு தான் சொல்லுகிறேன். விருத்தாசலத்தைப் பற்றிப் பேசு முன் சென்னைப் புராணத்தின் அம்பட்டன் வாராவதிப் படலத்தைச் சிறிது பார்க்கலாம்.

ஹாமில்டன் என்ற ஓர் வெள்ளையரின் பெயர் நிலைக்க வேண்டும் என்று நினைத்த யாரோ சிலர் ஒரு பாலத்துக்கு ஹாமில்டன் பிரிட்ஜ் என்று பெயர் வைத்தார்கள். ஹாமில்டன் நாளாவட்டத்தில் அம்பட்டனாக மாறினார். சென்னை வாசிகள் தமிழைக் கையாளும் வகையில் மட்டுமல்லாமல் மற்ற மொழிகளைக் 'கைவைப்பதிலும்' தலைசிறந்தவர்கள் என்பதற்கு இது ஒன்றே போதிய சான்று. 'ஹாமில்டன் பிரிட்ஜ்' என்பது 'அம்பட்டன் வாராவதி'யாக மாறி விட்டது. இதற்கு அடுத்தபடிதான் இன்னும் வியப்பை அளிக்கிறது. அம்பட்டனை இங்கிலீஷ்காரனுக்கி பார்பர்ஸ்

பிரிட்ஜ் (Barber's Bridge) என்று பின்னால் மாற்றிவிட்டார்கள். இப்போது அது மேரி ராணி கல்லூரி மாணவிகளின் தயவால் பி. பி. (B. B.) யாக மாறியிருக்கிறது. இன்னும் என்னென்ன கோலம் புனையுமோ! சென்னைத் தமிழர்களுக்குத்தான் தெரியும்.

'ஹாமில்டன் பிரிட்ஜ்' பட்டபாடுதான் விருத்தாசலம் என்ற ஊரை நினைக்கும் பொழுது நினைவில் எழுகிறது 'பழ மலை' என்பதுதான் அவ்வூரின் உண்மைப் பெயராகும். அவ்வூர்க் கோயிலின் பழைய கணக்குகளையும், அந்த ஊரின் சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் 'பழமலையப்பன்' 'பழமலைநாதன்' என்றெல்லாம் கொள்ளும் பெயர்களையும் பார்த்தால் இக்கருத்து வலியுறுகிறது.

தமிழ் நாட்டிலே இடைக்காலத்தில் புராண இலக்கியங்கள் பெருகின அல்லவா? எல்லாத் தலங்களுக்கும் வடமொழியில் புராணம் இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள்; வடமொழிப் புராணம் இல்லையென்றாலும் இருந்ததாகச் சொல்லிக் கொள்ளவாவது செய்வார்கள். இது அந்தக் காலத்துப் போக்கு.

பழமலை என்ற ஊருக்குப் புராணம் எழுத வந்தவர்கள் 'விருத்த அசலம்' என்று மொழிபெயர்த்தார்கள். ஆனால், மொழிபெயர்ப்பிலே தவறு ஏற்பட்டதை உணரவில்லை. 'பழைய மலை' என்ற பெயர் மொழிபெயர்த்த பிறகு 'முதிய மலை' என்று ஆகிவிட்டது. (விருத்த அசலம்—கிழட்டு மலை, முதிய மலை) ஊர்ப் பெயருக்குத் தக்கபடி சுவாமியின் பெயரும் இருக்கவேண்டுமல்லவா? எனவே, 'விருத்த கிரீஸ்வரர்' ஆனார். இதைவிடப் பரிதாபம் அம்மையின் பெயர் பட்டபாடுதான். "விருத்தாம்பாள்

என்பது அம்மையின் பெயர். 'எல்லா உலகும் ஈன்றும் இளமைக் கன்னியாய் இருப்பவள் அன்னை' என்று கூறும் புராணிகர்களே 'கிழவி' என்று பெயரிட்டு விட்டார்கள்! பிறகு வந்த ஒரு புராணிகர் பார்த்தார். "சீச்சீ! என்ன இது? அன்னை கன்னி யல்லவா?" என்று சொல்லி 'பாலாம்பிகை' என்ற பெயரோடு மற்றோர் அம்மைக்குக் கோயிலெடுத்தார். எனவே, எங்குமில்லாத வகையில் விருத்தாசலத்தில் எழுந்தருளும் 'கிழவனுக்கு' இரண்டு மனைவியர். ஒருத்தி கிழவி; மற்றொருத்தி குமரி. சீர் திருத்த வாதிகளின் நோக்கம் படலாம் என்றுகூட அவர் அஞ்சவில்லை.

ஏழாம் நூற்றாண்டில் எழுந்த சம்பந்தர் முதலியோர் விருத்தாசலத்தைத் தமிழாக்கித் 'திருமுதுகுன்றம்' என்று தேவாரத்தில் பாடினார்கள். ஹாமில்டன் அம்பட்டனாகிக் கடைசியில் பார்பர் ஆனது போலத்தான் இதுவும். பழமலை விருத்தாசலமாகி மீண்டும் திருமுதுகுன்றமாக மாறிற்று. ஹாமில்டனுக்கும் அம்பட்டனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது; பழமலைக்கும் விருத்தாசலத்துக்கும் அப்படியே. 'அம்பட்டன்' என்ற சொல்லை ஆங்கிலத்தில் பார்பர் என்று மொழிபெயர்த்தார்கள். அப்படியே 'விருத்தாசலம்' என்பதைத் தமிழில் 'முதுகுன்றம்' என்று மொழிபெயர்த்தார்கள்!

இதைக் கருதி நொந்த வள்ளலார் "பழமலையைக் கிழமலை என்று அறைவது என்னே உலகீர்" என்று பாடினார். கன்னித் தமிழைக் கிழட்டுத் தமிழாக்குவோர் எண்ணிப் பார்க்க வேண்டியது இத்தொடர்.

வருங்காலத்தில் . . .

ரா. பி. சேதுப் பிள்ளை.

அன்பர்களே! இன்று நாம் அனைவரும் அரசியல் வானத்தையே நோக்கி நிற்கின்றோம். சென்ற ஆண்டிலே விடி வெள்ளி தோன்றிற்று; இன்று கிழக்கு வெளுத்துவிட்டது. இதுவரை மேற்கு நோக்கிய முகங்கள் எல்லாம் இன்று கிழக்கு நோக்கி நிற்கின்றன. இன்னும் பதினைந்து திங்களில் நாமிருக்கும் நாட்டை நாமே ஆளப் போகின்றோம். இந்திய நாடு இந்தியர்களுக்குச் சொந்தமாகப் போகின்றது. அந்த முறையில் தமிழ் நாடு தமிழருக்கே ஆகும் என்பதில் தடையுமுண்டோ? தமிழ் நாடு தன்னரசு பெறும்—தமிழரசு பெறும் என்று எண்ணும்பொழுது தமிழர் உள்ளம் தழைக்கின்றது.

இனி வருங்காலத் திட்டத்தில் ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு இதுவரை இருந்த தலையாய நிலைமை தமிழ் இலக்கியப் பாடத்திற்கு வரும் என்று நம்புகிறோம். அக்காலத்தில் தலைமையான மொழி பயிற்றும் ஆசிரியர்க்குக் குறைந்த சம்பளமும், மற்றைய பாடங்களை அம்மொழியிலே போதிக்கின்ற ஆசிரியர்க்கு அதிகச் சம்பளமும் இருத்தல் முறையாகுமா? என்னதான் சொன்னாலும் சம்பளத்தின் உயர்வு தாழ்வு பற்றியே இவ்வுலகத்தில் பெருமையும் சிறுமையும் வரையறுக்கப்படுகின்ற தென்பதை மறுக்க முடியுமா?

வருங்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் செய்தற்குரிய சிறந்த வேலைகள் பல இருக்கின்றன. குடியரசாட்சியில் பேச்சுக்கும் எழுத்துக்கும் பெருஞ் சிறப்புண்டு. தமிழ் மேடையிலே நிகழும் பேச்சுக்களைச் சுருக்கெழுத்திலே எடுக்கும் கலையைத் தமிழாசிரியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று பத்திரிகை யுலகம் பெரும்பாலும் தமிழ்ப் பேச்சுக்களை மதிப்பதில்லை; பிரசுரம் செய்வதில்லை. இந்த நிலை மாறியே தீரவேண்டும். அதனை மாற்றும் ஆற்றல் தமிழறிஞரிடம் இருக்கின்றது. நாமெங்கும் தமிழ் மயமாக்கிவிட்டால் பத்திரிகைகள் தாமே தமிழிற் கவிந்து வரும்.

தமிழ் அறிஞர்களே! கலைச் செல்வத்தை வாரி வழங்குங்கள். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோமானல் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ் நாடு புத்துயிர் பெற்றுவிடும். எட்டுத் திசையிலும் தமிழ் நாடு ஏற்றமுற்று விளங்கும். பணிசெய்ய வாரீர்!

தமிழர் நிலை

ப. அரங்கசாமி

தாழ்வுற்ற தமிழகமே தலையைத் தூக்கு!
தயங்காது வாழுதற்கு வழியை ஆக்கு!
பாழுற்ற பாலைநிலம் ஆனாய் அந்தோ!
பழம்பெருமை அனைத்தையும்நீ இழந்தா யன்றோ!
தாழ்வுற்ற உன்நிலையை உயர்த்தல் வேண்டித்
'தமிழரசுக் கழக'த்தை அமைத்தா ரின்று
வீழ்ச்சியுற்ற நீஆட்சி செய்யுங் காலம்
வெகுதூரம் இல்லை, அதை உணர்வா யின்று!

நாடிழந்தோம் கலையிழந்தோம் நாமெல் லோரும்
நமதருமைத் தமிழ் மறந்தோம் நமக்கே யான
ஏடிழந்தோம் ஏனென்றும் தெரிந்தோ மில்லை
எதனாலே இந்தநிலை அறிந்தோ மில்லை
கேடுற்றோம் கீழ்நிலையை அடைந்தே நின்றோம்
கிள்ளியெறி கீரையென மதிக்கப் பட்டோம்
பாடுபட்டோம் பண்புற்றோம் ஆனால் இன்று
பரிதாப நிலையடைந்தோம் பாரோர் முன்பு!

நாடி நின்றோம் வேற்றுமொழி நாகரீகம்
நமதருமைத் தமிழ்மொழியை நினைத்தோ மில்லை.
தேடிவைத்த திருக்குறளைப் படித்தோ மில்லை
தெள்ளுதமிழ்க் காவியங்கள் பார்த்தோ மில்லை
பாடுறும்நல் தமிழ்ச்சரிதம் படித்தோ மில்லை
பழந்தமிழர் ஆட்சிமுறை அறிந்தோ மில்லை
வீடென்றும் விதியென்றும் வீணாய்ப் பேசி
வெறுங்காலம் கழித்திட்டோம்! விழித்தோ மில்லை!

விஞ்ஞானப் பேரறிவு விரிந்து மேற்கே
விதவிதமாய் அருஞ்செயல்கள் செய்யுமிந் நாள்
மெஞ்ஞானம் ஒன்றுமட்டும் மிகவே பேசி
மேலுலகம் அடையும்வழி அதுவும் பேசி
அஞ்ஞானம் ஒழிந்தவராய் அவனைக் காண
அருமுயற்சி செய்திட்டோம்! ஆண்டி யானோம்!
இஞ்ஞாலம் முழுவதையும் ஒன்றாய் ஆண்டோம்
எனக்கூறி மகிழ்ந்திட்டோம்! இகழப் பட்டோம்!

வடகோடித் தமிழ் எல்லை இமயம் என்று
வரைந்திட்டார் பழந்தமிழர் ஏட்டில் அன்று
இடமாக இன்றைக்கு வடக்கே எல்லை
எதுவென்று கூறுதற்கும் முடிந்தோ மில்லை!
திடமாக இன்று தமிழ்ச் சென்னை தானும்
தெலுங்கர்தம தென்கின்றார், நமக்கே நாணம்!
விடமாட்டோம் விட்டதெலாம் போதும் என்று
வீறுடனே தமிழர்களே எழுவீர் இன்று!

ஆறுவெட்டிக் குளந்தோண்டி நீரைப் பாய்ச்சி
அளவில்லா நெல்விளைத்து அகிலம் எங்கும்
சோறூட்டித் துயர்துடைத்தோம்! இன்று நாமேன்
சோறின்றித் துடிதுடித்துச் சோர்ந்தோ மென்றால்
சீருற்ற தமிழரசு நமக்கிங் கில்லை
சிறப்புற்ற தனித்தமிழர் ஆட்சி இல்லை!
வீறுற்ற தமிழரசு அமைத்தல் வேண்டி
விரைந்திடுவீர் தமிழர்களே நீவிர் இன்று!

நடுத்தர மக்கள் பொருளாதார நிலை

அ. ச. ஞானசம்பந்தம்

ஒரு நாடு என்று எடுத்துக்கொண்டால் ஒரு சிலரே பொருள் படைத்தவராக இருப்பர்; ஒரு சிலர் ஒன்றுமற்ற ஏழைகளாக இருப்பர்; பெரும்பான்மையோர் நடுத்தர மக்கள் என்று அழைக்கப்படும் நிலையிலிருப்பர். இவர்கள் வாழ்க்கைதான் நாட்டின் செல்வ நிலைக்கு அறிகுறியாகும். பெரும்பாலும் இத்தகைய மக்கள் உழைப்பையே நம்பி வாழுகின்றவர். உழைத்த உழைப்புக்கேற்ற பயன் கிடைக்கின்ற பொழுது இவ்வகை மக்கள் நல்ல பண்பாடு உடையவர்களாக இருப்பர். மேலும் இவர்களினும் மேம்பட்ட பொருளாளர் நிலைமையைத் தாமும் அடைவதற்கேற்ற வழிகளை முனைந்து தேடுவர். ஆனால் இத்தகைய எண்ணம் மக்களுக்கு எல்லாக் காலத்தும் இருந்துவந்த தென்று கூற முடியாது. செல்வமுடையார் செம்மையாக வாழ்ந்து, செல்வத்தின் பயன் ஈதலே தவிர இறுக்கிப் பிடித்த லன்று என்று நினைக்கின்றவரை, இடையிலுள்ள மக்கள் இவர்கள்மேல் பொறாமையோ வெறுப்போ கொள்ளமாட்டார். இந்நிலை இந்த நாளில் மாறிவிட்டமையால்தான் பெருந்துன்பங்கள் தோன்றுகின்றன. இந்த நடுத்தர மக்கள் மேலும் பொருள் சேர்த்து அப்பொருளாளர் கூட்டத்தில் சேர முனைகின்றனர். அப்பொருளாளர்களோ இவர்கள் உழைப்புக்கு ஏற்ற கூலியைக் கொடாமல் இவர்களை மேலும் வறுமையடையச் செய்ய முயல்கின்றனர். இதனால் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமை பெரிதாகிப் பூசல் முற்றுகிறது,

இனி, பழந்தமிழ்நாட்டை நோக்குவோம். ஒரு சிலர் பணம் படைத்தவராக இருந்தனர் என்பதும், பெரும் பான்மையினர் நடுத்தர மக்களாகவும், ஒரு சிலர் மிகவும் ஏழ்மை வாய்ந்த மக்களாகவும் இருந்தனர்என்பதும் மறுக்க முடியாத உண்மை. இன்றும் இத்தகைய நிலையே தமிழ் நாட்டில் நிலவுகிறது. ஆனாலும் இரண்டுக்கும்தான் எவ்வளவு வேற்றுமை! அன்று இம்மூவகை மக்களுக்கும் இடையே இருந்த மனப்பான்மை இன்று மறைந்தொழிந்தது. மறைந்த தோடு மட்டும் இல்லாமல் வெறுப்பு முதலிய தவறான குணங் களும் நிரம்பிவிட்டன. இதன் காரணம் என்னவென்று ஆராயவேண்டும். நாளாவட்டத்தில் மக்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையில் திருப்தி அடையாமல் இருக்கப் பழகினர். இயற்கையோடு வாழ்ந்து, எளிய வாழ்க்கையைக் கைக்கொள் ளுகிற வரையில் திருப்தி மனத்தில் குடி கொண்டிருக்கும். மனத்தில் அமைதி நிலவும். திருப்தியடைந்த ஒருவன் மனத் தில் பொறாமை முதலிய தவறான எண்ணங்களுக்கு இட மில்லை அதேபோலப் பெருஞ் செல்வம் படைத்தவனும், அச் செல்வத்தை வைத்துக்காப்பாற்றி வேண்டியவர்க்குவழங்கும் பொறுப்பைமேற்கொண்டவனாகத் தன்னைக் கருதினான். அச் செல்வம் தான்மட்டும் அனுபவிப்பதற்காக ஏற்பட்ட தன்று என்றுநினைத்தான். எப்போதாவது ஒருவர் இருவர் அங்ஙனம் நினைக்க முற்பட்டாலும், அவ்வெண்ணம் தவறானது என்று எடுத்துக்காட்டப் பெரியோர் இருந்தனர். தகுந்த அறவுரை களால் இத்தகைய மன நிலைகளை அவர்கள் அகற்றினர். உதாரணமாக நக்கீரர் கூறுவதைக் காண்க.

> " செல்வத்துப் பயனே ஈதல்
>
> துய்ப்பேம் எனினே தப்புந பலவே "

செல்வத்தின் பலன் பிறருக்குத் தருதலேயாம். அவ்வாறில்லாமல் யானே அனுபவிப்பேன் என்று நினைத்துச் சேர்த்து வைத்தால் அது அழிவது நிச்சயம். பாரியை ஒத்த வள்ளல்கள் தோன்றி வளர்ந்த நாடாகும் இது. இத்தகைய வள்ளல்கள் செல்வத்தின் பயன் ஏது என்பதை வாழ்ந்து காட்டினர். இரண்டு பிரிவாரும் மனத்திருப்தியோடு வாழ்ந்தமையால் நாடு நல்ல நிலையில் இருந்தது. முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கம் என்ற பிரிவினையும், அப்பிரிவினையால் ஏற்படும் துன்பங்களும் இருக்கவில்லை. செல்வர் வாழ்க்கைக்கு ஓர் உதாரணம் காண்போம். கோவலன் பெருஞ்செல்வர் குடும்பத்தில் பிறந்தவன். மணம் ஆன பிறகு தனிக் குடும்பம் நடத்திவந்தான். தானே வாணிகமும் செய்தான். மாதவியோடு சேர்ந்து "குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்தான்". மலையத்தனை செல்வத்தை அழிப்பினும், அவளை வெறுத்து வந்த பின்னர்த் தந்தையைக்கண்டிருப்பானேயாகில் மறுபடியும் மலையத்தனை செல்வத்தைப் பெற்று மீண்டும் வாணிகம் தொடங்கி இருக்கலாம். ஆனால், மானமுடைய அவன் அவ்வழியை மேற்கொள்ளவில்லை. மீண்டும் தனது உழைப்பால் பொருள் தேடவேண்டும் என்று நினைத்தானே தவிர எளிமையாக மானத்தை இழந்து பொருளைப் பெற வேண்டும் என்று எண்ணவில்லை. இன்று கள்ளச் சந்தையில் பொருள் தேடும் பெரியோர் நிறைந்த நம் நாட்டில் இத்தகைய உதாரணம் எங்ஙனம் வரவேற்கப்படுமோ அறியோம். ஏழையாயினும் நடுத்தர வகுப்பாராயினும் பணக்காரராயினும் உழைப்பையே அணிகலமாகக் கொண்டு வாழ்ந்தனர் பழந்தமிழர்.

இனி, நடுத்தர வகுப்பில் உள்ள ஒரு குடும்பத்தைக் காண்போம். மாடுகள் வைத்துப் பால், மோர், நெய் முதலிய

வற்றை விற்று வாழ்க்கை நடத்தும் இடையர் குடும்பம் அது. குடும்பத்தை நடத்தும் பொறுப்பு பெண்ணுக்கேயன்றி ஆண்மகனுக்கு இல்லை. இது கருதியே வீட்டை ஆளுகின்றவள் என்று பொருள் தரும் "இல்லாள்" என்ற ஒரு சொல் தமிழில் இருக்கிறது. ஆனால் அதற்கு மறுதலையாக "இல்லாளன்" என்ற சொல்லை உண்டாக்கவில்லை. இவ்வாறு குடும்பத்தை நடத்தும் பெண் ஒருத்தி. மிக விடியற்காலத்தில் எழுந்துவிடுகிறாள். பெரியதொரு பானையில் தயிரை வைத்துக் கடைகிறாள். கடையும் பொழுது புலி உறுமுவது போன்ற ஓசை உண்டாகிறது. மோரைக் கடைந்து எடுத்துக் கொண்டு சென்று வியாபாரம் செய்கிறாள். அங்ஙனம் மோர் விற்பதோடு மட்டுமல்லாமல் தனியாக நெய்யையும் வியாபாரம் செய்கிறாள். நெய்யின் விலை மிகுதியாக இருக்குமென்பதற்கு ஐயமில்லை. இவ்விரண்டினாலும் பெற்ற பொருளை என்ன செய்கிறாள் என்று காண்போம். மோர் விற்று வந்த பொருளால் குடும்பத்தை உண்பிப்பதோடு, சுற்றத்தாரையும் காப்பாற்றுகிறாள். பட்டினி கிடந்தாவது பொருளைச் சேகரிக்கவேண்டும் என்ற பேதைமை தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் வருமானம் முழுவதையும் செலவிட்டுவிட்டுக் கடனாளியாகிற வழக்கமும் இல்லை. அறிவுடைய ஒருவன் அளவறிந்து செலவு செய்வான். இது கருதியே வள்ளுவப் பெருந்தகை "ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை, போகாறு அகலாக் கடை" என்றுகூறினார். வருமானம் குறைவாயிருப்பினும் கெடுதலில்லை, செலவு அதனைவிட மேற்போகாதவிடத்து என்பதே இதன் பொருள். மோர் விற்ற பொருளால் குடும்பத்தைக் காப்பாற்றிய நமது ஆயர்குல மடந்தை நெய் விற்ற பொருளை என்ன செய்கிறாள் என்று ஆசிரியர் கூறுகிறார். இன்னது செய்யவில்லை என்றும்,

இன்னது செய்தாள் என்றும் கூறுகிறார். அப்பொருளால் பொன்னை வாங்க வில்லையாம். அதற்குப் பதிலாகக் கறவை எருமைகளையும் பசுக்களையும் வாங்கினளாம். இங்ஙனம் கூறவேண்டிய இன்றியமையாமை என்ன? கறவை மாடுகளை வாங்கினள் என்று கூறினாலே வேறு ஒன்றும் வாங்கவில்லை என்ற பொருள் தானே பெறப்படுமே, அங்ஙனமிருக்க இவ்வாறு கூறவேண்டிய காரணமென்ன? இக்காலத் தமிழ் நாட்டில் வாழும் நமக்கு இவ்வடிகள் கண் திறந்து விடுதல் கூடும். எவ்வளவு கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் நமது தமிழ்ச் சகோதரிகள் உடலை அலங்கரிக்கின்றன? தங்கமும் பொருள்தானே? அத்தங்கத்தை வாங்குவதால் நேரும் குறைவென்ன என்று கேட்கலாம். ஆனால் தங்கத்துக்காகப் போடப்படும் முதல் பயனற்ற முதலாகும். (dead Capital). முதல் என்றாலே அது மேலும் பொருளைச் சம்பாதிக்கக்கூடியதாகும் என்ற அர்த்த முண்டு. ஆனால் தங்கத்துக்காகச் செலவழிக்கப்படும் முதல் பயனற்றது என்றாலும் இன்று நம் நாட்டில் எத்தனை பெண்மணிகள் இதனை உணர்ந்திருக்கின்றனர்? ஆனால் பழந்தமிழ்ப்பெண்கள் இதனை அனுபவத்தில் நடத்தினர். அதனாலேயே ஆசிரியர் அவள் பொன்னை வாங்கவில்லை என்று கூறினார். பொன்னை வாங்காமல்கூட இருக்கலாம். ஆனால் அப்பொருளைக் கலயத்தில் போட்டு மண்ணில் புதைத்து வைக்கும் வழக்கம் அதை விடத் தீமையானதாகும். ஆகவே அம்முதலை வைத்து அதனால் பயனடையும் பண்பாடே சிறந்ததாகும். இன்றும் அம்முறையில் வாழ விரும்புகிறவர் உண்டு. ஆனால் திடீரென்று பெரும் பொருள் சேகரிக்கவேண்டும் என்ற கருத்தால் பங்கு மார்க்கெட்டில் (Stocks and Shares market) நுழைந்து முதலிழக்கும் தன்மையுடையார் பலர். இங்ஙனம் "ஆக்கங்

கருதி முதலிழக்கும்'' வகையில் ஆயர்மகள் வாழவில்லை. தனது தொழிலுக்கு ஏற்ற முறையில் பயன்படக்கூடியவையான கறவை மாடுகளை வாங்கினாள். வகையறிந்து, பயன்தரும் வழியில் பொருளைப் போட்டுப் (Investing) பயன் அடைந்தாள்.

பெரும்பாணாற்றுப்படை என்ற பாடலில் இக்கருத்துக் கூறப்படுகிறது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிப்படி பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த நடுத்தர மக்களின் பொருளாதார நிலைக்கு இந்த உதாரணம் ஒன்றே சாலும். இக்கருத்துள்ள அடிகளைக் காண்க.

" நள்ளிருள் விடியற் புள்ளெழுப் போகிப்
புலிக்குரன் மத்தம் ஒலிப்ப வாங்கி
....
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர். [பெ. பா. 55-64]

[குறு நெறிக் கொண்ட கூந்தல்—வளைந்துள்ள கூந்தல் அளை—மோர்; நல்லான்—பசுக்கள்; கருநாகு—எருமைக் கன்றுக்குட்டி.]

"கன்னட அரசு காண்போம்!"

"கன்னட இனத்தைச் சார்ந்தோர் அனைவரும் ஒன்றுபட வேண்டும். கன்னடர்களுக்கெனத் தனி அரசு நிறுவுவதற்கான இயக்கத்தைத் துவக்க வேண்டும். இதற்காகச் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்குக் கன்னட இனத்தார் திரண்டுவர வேண்டுகின்றேன்.'

—கிறிஸ்துவக் கல்லூரியில் பேராசிரியர்,
ஆர். வி. ஜாகிர்தார்

புரட்சிக் கவி இளங்கோ

'ஞானம்'

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் ஒரு பெரும் புரட்சிக் கவியாவார். அவரது வரலாறும் அவர் இயற்றிய காவியத்தில் வரும் கருத்துக்களும் இதை வலியுறுத்தும்.

தந்தை சேரலாதன், தமையன் செங்குட்டுவன் ஆகியோர்களுடன் அரசசபையிலிருந்த இளங்கோவைப்பார்த்து, 'சேர நாட்டை ஆளப் பிறந்தவன் செங்குட்டுவனல்ல: இளங்கோதான்' என்று சோதிடன் சொன்னான். அதைக் கேட்ட இளங்கோ 'மூத்தவன் இருக்க இளையவன் ஆள்வது முறையல்ல; ஆளப் பிறந்தவன் நானல்ல; என் அண்ணனே. சோதிடன் சொன்ன விதியை என் மதியால் வெல்வேன்' என்று கூறி அப்போதே துறவியானார்.

இளங்கோ எதைத் துறந்தார்? அரசர் பதவியையும் அரண்மனை வாழ்வையும். இது எத்தகைய புரட்சிகரமான தியாகம்! இளங்கோ புவியரசைத் துறந்தார். ஆனால் கவியரசராய் விளங்கினார். செம்மல் செங்குட்டுவனைவிடப் புகழுடையவர் கவி இளங்கோவே. செங்குட்டுவன் ஆட்சியின் துணை கொண்டு தனது பெயரை நிலை நாட்டினான். ஆனால், இளங்கோவடிகளோ அறிவின் திறத்தால் தமது புகழை நிலை நாட்டினார். என்றும் அழியாத கலைச் செல்வத்தைக் கொடுத்து அதற்கு நம் இருதயத்தை இருப்பிடமாக அமைத்துவிட்ட பெருமை இளங்கோவைச் சாரும்.

பிற்காலப் புலவரெல்லாம் நூலியற்றப் புகுங்கால், இறை வணக்கப் பாடல் இயற்றுவதுண்டு. பிள்ளையார் தோத்திரமின்றித் துவங்குவதில்லை. 'முந்தி முந்தி விநாயகரே' என்றோ அல்லது, 'தொந்திக் கணபதியே

என்றே துவங்குவர். அந்தச் செய்யுளிலே அப்பம், முப்பழம், கடலை உருண்டை அத்தனையும் காட்சியளிக்கும். இப்படிக் கணபதியின் தொப்பையைத் தடவித் துவக்கப்பட்ட நூல்களில் குப்பையில் போய்ச் சேர்ந்தவை எண்ணில. இந்த உண்டைக் கணபதியைத் தொழுது நூல் இயற்றும் வழக்கம் பண்டைப் புலவர்களிட மிருந்ததில்லை. ஏன், இந்தத் தொந்திக் கணபதியே தமிழ் நாட்டில் மிகப் பிந்திய காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டவர்தான். இதற்குச் சங்க நூல்களே தக்க சான்று.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எப்படித் துவக்குகின்றார் பாருங்கள்:

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர் தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றிவ்
வங்கண் உலகளித்த லான்

* * * *

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்.

* * * *

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்.
மேல்நின்று தான்சுரத்த லான்

* * * *

என்று திங்கள், ஞாயிறு, மழை ஆகிய இயற்கைச் சக்திகளைப் போற்றுகிறார். அதிலே இறைவனது அருளைக் காண்கிறார் போலும்! திங்களைச் சோழ மன்னனின் வெண்குடைக்கும், ஞாயிற்றினை அவனது ஆக்ஞா சக்கரத்திற்கும் உவமை காட்டுவதால் இயற்கை, இறைவன், அரசன் ஆகிய மூன்றினையும் சேர்த்து வணக்கமும் வாழ்த்தும் கூறுகிறார். இது ஒரு புது முறை.

திங்களின் தண்ணொளியும், ஞாயிற்றின் செஞ்சுடரும் இல்லாவிடின் உயிர்கள் வாழ்வது இயலாது. மழை இல்லா விடினும் அப்படியே! 'வானம் வறக்குமேல் வானவர்க்கும் பூசனை செல்லாது' என்பதன்றோ வள்ளுவர் வாக்கு? ஆகவே, மக்கள் வாழவும் மண் தழைக்கவும் காரணமான இயற்கைச் சக்திகளுக்குத் தலைவணங்கி நன்றிசெலுத்துவதே தமது தலையாய கடமை என்று இளங்கோ எண்ணுகிறார்.

இனி, நாட்டையும் வணங்குகிறார்.

> **பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்**
> **வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு**
> **ஓங்கிப் பரந்து ஒழுகலான்.**

'போற்றி போற்றி பூம்புகார் போற்றி, பொன்னாடு போற்றி என்று புகாரைப் போற்றுவதன் மூலம் தமிழ் நாட்டையே போற்றுகிறார். இங்கும் அரச வணக்கம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. புகார்ப்பதி வாழும் மக்களின் பெருமையைக் கூறுகின்றார்:

'பதி யெழு வறியாப் பழங்குடி'

இமயமலை பொதிய மலைஎல்லாம் எப்படி இடம் பெயர் வதில்லையோ, அதுபோலப் புகார் நகரத்து மக்களும் அந்நக ரத்தை விட்டு நீங்காது நிலை பெற்று வாழ்பவராவார் என்று சோழநாட்டு மக்களின் பெருமையைக் கூறுகிறார்.

இதை ஒரு தேசியப் பாடலென்றே சொல்லலாம். தேசிய கீதம் என்பது என்ன? நாட்டின் இயற்கையையும் வளத்தையும் மக்களின் மேன்மையையும் அரசின் மாண்பை யும் போற்றுவதே யன்றோ! ஆனால் இன்று அடிமை நாட்டில் ஆளுவோரைத் தாக்கிப் பாடுவதுதான் தேசிய கீதமாக எண்ணப்படுகிறது. ஆனால், இளங்கோவடிகள் காலத்தில்

தமிழகம் தன்னாட்சி செலுத்தியது. குறை களைந்து முறை செய்து காத்ததால், மன்னனை 'இறை' யென வாழ்த்தி வணங்கினர். எனவே, நாட்டுப் பற்றும் அரச பக்தியும் பிரிக்க முடியாதவாறு பிணைந்து இருந்தன. அதனால்தான் இளங்கோவடிகள் மண்ணைப் போற்றுவதோடு நில்லாமல் மன்னனையும் போற்றுகிறார்.

இதே போன்று மங்கல விழாவிலும், மற்றச் சடங்குகளிலும் நாட்டையும் நாட்டை யாளும் மன்னனையும் போற்றும் வழக்கம் மக்களிடையேயும் இருந்து வந்ததற்குச் சிலப்பதிகாரத்தின் வேறு சில இடங்களிலும் சான்று உண்டு.

கண்ணகி கோவலன் திருமணத்திற்குப் பின் அவர்களைப் பள்ளியறை சேர்க்கையில், இளம் பெண்கள் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வாழ்த்துக் கூறுகின்றனர். அப்போது,

> இப்பால் இமயத்து இறுத்திய வாள் வேங்கை
> உப்பாலைப் பொற் கோட்டு உழையதா—எப்பாலும்
> செருமிகு சினவேல் செம்பியன்
> ஒரு தனி ஆழி உருட்டு வோன் எனவே.

['எங்கள் சோழ மன்னன் இமயத்திற்கு இப்பால் பொறித்த புலிக் கொடியானது அப்பாலுள்ள பொன் மலையாகிய மேருமலையிலும் விளங்குவதாக, எல்லாத் திசைகளிலும் போரில் வெற்றி பெற்ற எங்கள் செம்பியன் தனது ஆணையை ஒழுங்காகச் செலுத்துவோனாக]' என்று தங்கள் மன்னன் இமயத்தில் புலிக்கொடி நட்ட பெருமையைக் கூறி, அக்கொடி மேரு மலையையும் எட்டிப் பிடிக்க வேண்டுமென்ற தங்கள் எண்ணத்தையும் வெளிப்படுத்தி, திக்கெட்டும் வெற்றி

பெற்ற சோழ மன்னன் தீதின்றி நெடுங்காலம் வாழ்வோனாக என்று வாழ்த்துக் கூறுகிறார்கள்.

கானல் வரியிலும் இதே காட்சியைக் காண்கிறோம். கோவலனும் மாதவியும் மாறிமாறிப் பாடுங்கால் சோழ மன்னனின் பெருமையையும் காவிரியாற்றின் வளத்தையும் வாழ்த்திய பின்னரே வரிப்பாடல்கள் பாடுகின்றனர்.

இளங்கோவடிகள் தமது காவியம் முழுவதிலும் பெண்ணின் பெருமையையே பேசுகின்றார். காவியத்தின் பெயராகிய சிலப்பதிகாரம் என்ற சொல் பெண்ணின் காலணியாகிய சிலம்பையே குறிக்கின்றது. சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியே முக்கியப் பாத்திரமாக இருக்கின்றாள்: கண்ணகி மூலம் பெண்ணினத்தின் வரலாற்றிலேயே ஒரு புரட்சியைச் செய்கிறார் இளங்கோவடிகள். புரட்சிக்கு ஆண்களே தகுதியுடையவர் என்று எல்லோரும் எழுதுவர். ஆனால் இளங்கோவடிகள் தாங்கமுடியாத கொடுங்கோன்மை தாண்டவமாடினால் ஆக்கும் செயல் படைத்த பெண்களும் பழி வாங்கும் படையின் முன்னணியில் நிற்பர், முரசை முழக்குவர், அரசை அழிப்பர் என்று அறிவிக்கிறார். தாய்மைக்குணத்தையே பெண்மைக்கு உரிமையாக்கினர் பெரியோர். ஆனால் அநீதி அரசோச்சினால் அரசியலில் ஈடுபடுவதும் அதை அழிப்பதும் பெண்களின் தலையாய கடமை என்பதே சிலப்பதிகாரம் காட்டும் செந்நெறி. அல்வழிப் பட்ட அரசில் தாய்மை உணர்வும் கூட அநீதியால் நிலை குலைக்கப்பட்டு ஆண்மையாகவும், அழிப்புச் சக்தியாகவும் மாறிவிடும் என்ற புது நெறியை—வேறு யாரும் தீட்டாத புரட்சிச் சித்திரத்தைத் தீட்டியவர் இளங்கோவடிகள். இது இலக்கிய உலகத்தில் இளங்கோ செய்த ஒரு பெரிய புரட்சி.

நாட்டு நடப்பு

'ஞானம்'

சென்னை, பிரகாசம் மந்திரி சபைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாடகம் முடிந்துவிட்டது. காங்கிரஸ் தலைவர் கிருபாலினியின் வருகை ஓரளவு வெற்றி பெற்றது. 30-ம் தேதி வரை பதவியை விடுவதில்லை என்று பிடிவாதமாயிருந்த அவர், 21-ம் தேதியோடு முடித்துக்கொள்ளத் தீர்மானித்து விட்டார். அந்தமட்டும் பெரிய மனசு பண்ணினாரே! இந்தத் தள்ளாத வயதில் பிரதம மந்திரி வாழ்வைப் பத்து நாளைக்கு விட்டுத்தருவது என்றாலும் கூட அது எவ்வளவு பெரிய காரியம்! கிருபாலினி அவர்கள் இன்னொரு வகையில் தோல்வியும் அடைந்திருக்கிறார். மீண்டும் பிரகாசம் தலைமையிலேயே மந்திரி சபையைத் திருத்தி அமைப்பதென்று அவர் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை.

மந்திரி சபையைக் கவிழ்க்க முயன்றவர்கள் எந்தக் கொள்கையின்மீது அப்படிச் செய்கிறார்கள் என்று காங்கிரஸ் தலைவர் கேட்டதாகத் தெரியவில்லை. மேலும் காங்கிரசுக்குள் கோஷ்டிகள் கூடாது என்ற கொள்கையுடைய கிருபாலினி சட்டசபைக்கட்சியிலுள்ள நான்கு கோஷ்டியினரையும் தனித்தனி அழைத்துப் பேசியது விந்தையே யாகும்.

* * * *

மார்ச் 1, 2 தேதிகளில் மாகாணத் தமிழாசிரியர் மாநாடு சென்னையில் நடைபெற்றதை வாசகர்கள் அறிவர். தமிழாசிரியர்களுக்கு 'ஸ்விட்ச்' போடக்கூடத் தெரியாது என்று பழித்துப் பேசிய திரு. அவிநாசிலிங்கம் அவர்களைக் கொண்டே மாநாட்டுத் திறப்புவிழா நடத்தியதானது தமிழாசிரியர்களின் மன்னிப்புக் குணத்தையே வெளிப்படுத்துகின்றது. மாநாட்டுக்கு வரவேற்புத் தலைவராகவும், தலைவராகவும் முறையே அமைந்த திருவாளர்கள் மு. வரதராசன், ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியவர்களின் பேச்சுக்கள் தமிழாசிரியர்களை ஒரு புதிய தமிழகத்துக்கு அழைத்துச்

செல்வனவாக இருந்தன. பண்டிதர்கள் எல்லாம் பழம் பெருமை பேசுபவர்கள் என்ற பழிச்சொல்லை நீக்கிப் பழம் பெருமையிலே புதிய ஒளி வீசும்படி செய்துவிட்டனர் அப்பெரியார்கள். தமிழாசிரியர்கள் கூலிக்குக் கூச்சலிடு கிறார்கள் என்ற குறும்புப் பேச்சுக்கள் மாநாட்டில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன. 'பிற ஆசிரியருடன் தமிழா சிரியர்களையும் சமமாக நடத்தவேண்டும்' என்று மாநாட்டில் நிறைவேறிய தீர்மானமானது தமிழாசிரியர்கள் வேண்டுவது வயிற்றுக்குச் சோறு மட்டுமல்ல, வாழ்க்கைக்கு வேண்டிய தன்மானமும்கூட என்பதை உறுதி செய்தது. அந்தக் காலத்தில் தமிழரசைக் கட்டிக் காத்தவர்கள் தமிழ்ப் புலவர் கள். இன்றும் அதே புலவர் பரம்பரையில் வந்த தமிழாசிரி யர்களின் மாநாடு தமிழ்நாட்டுக்கு எல்லை வகுத்ததோடு அந்த எல்லைக்குள்ளே தமிழரசு வேண்டுமென்றும் தீர்மானம் செய் தது. 'நாங்கள் வெறும் பண்டிதர்கள் மட்டுமல்ல, அரசியல் உணர்ச்சியும் சுதந்திர ஆர்வமும் எங்களுக்கும் உண்டு' என்பதை மேற்படி தீர்மானத்தின் மூலம் காட்டி விட்டனர். மாநாட்டின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் காங்கிர ஸைச் சேர்ந்த திரு. சிவஞானத்தையும், திராவிட கழகத் தைச் சார்ந்த திரு சி. என் அண்ணாத்துரை அவர்களையும் ஒரே மேடையில் தோன்றிப் பேசச் செய்ததாகும். அந்தக் காலத்தில் அரசாளும் வேந்தரிடையே பகை தோன்றினால் புலவர்கள் முன்னின்று, தீர்த்துவைப்பது வழக்கமாம். ஆனால், இன்று அரசாளும் உரிமை நமக்கில்லை. அரசுரிமை கோரும் உரிமை மட்டும் உண்டு. எனவே, கருத்து வேற் றுமை உடைய இரு வேறு அரசியல் கட்சியில் செல்வாக் குள்ள இருவரையும் தமிழரசு என்ற கொள்கையில் பிணைத்து வைக்க முற்பட்ட தமிழாசிரியர் மாநாட்டினரின் செயல் பாராட்டத் தக்கது. இதற்கு முதற் காரணராகிய அறிஞர் அன்பு கணபதி அவர்களைத் தமிழகம் பாராட்டு கிறது.

எனெஸ்கே பிலிம்ஸ்

மகோன்னத வெளியீடு

T. A. மதுரம்

காந்தாவாக நடிக்கும்

பைத்தியக்காரன்

கதை வசனம்:	ஸ்டுடியோ :	டைரக்ஷன் :
S. V. சகஸ்ரநாமம்	நியூடோன்	கிருஷ்ணன் பஞ்சு

விநியோக உரிமைகள்:

திருச்சி : எம்மார் பிலிம்ஸ், திருச்சி.

மதுரை : லக்ஷ்மி பிலிம்ஸ் சர்க்யூட், கரூர்.

மதராஸ் : P. AR. N. CT. நாராயணன் செட்டியார்.

மற்றவை: தமிழ்நாடு டாக்கீஸ், கீழ்ப்பாக்கம்.

வெளியிட்டோர்: ம பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. அச்சிட்டோர்: திரு. கே. சி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை-1 **ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்.**